யடைதருபல்லியம்பலவுமடஙகாதமுழகெழுப்ப, (௪௫)

மாகதர்கள்புகழ்ந்தேத்தமாதராரம்பையர்நடிப்ப
மோகமிகுதும்புருநாரதர்முனிவில்யாழ்தழுவிப
பாகமிகுமிசையமுதம்பண்புகமழ்தரவூப்பச்
சோகமிலாப்பூதகணநதுளவியிடநதொறநெருங்க. (௪௬)

சித்தர்சாரணரியக்கர்திகழ்விச்சாதராகருட
ரொத்தபுகழ்க்காந்தருவரோஙகியவின்னவரவுணர்
வித்தகரிந்திரர்பிரமாயினிரசனுர்த்தனர்முதலாம்
பத்தர்பலரெதிர்நின்றுபாங்குபெறச்சேவிப்ப. (௪௭)

திருவடியிற்கழலொலிப்பச்செறிபுற்றேலவைப்பொலிய
வொருவரும்வெண்டலைமாலையுரகங்களொடுதுயலக்
குருமதிசெஞ்சடைவிளங்கக்குளிர்முகக்கண்ணருள்கொழிப்பப்
பொருவரியதிருமுகத்துப்புல்லியவெண்முறுவலெழ. (௪௮)

அண்டபகிரண்டமெலாமொருங்கீன்றவன்னையெனுந்
தண்டமதிப்பிறைநுதலாளொருபாகந்துறைந்தமரக்
கண்டவிருமைந்தர்களுமிருபாலுங்கலந்திருக்கக்
கொண்டமகிழ்ச்சியினமர்ந்தானகோதிலாருளப்பெருமான். (௧௯)

இருந்தபிரானவரவர்தங்குறைவினாயிறைகொடுத்துத்
திருந்தவமரிடமடையச்செலுத்தியபின்றனிகண்டு
பொருந்தவுமையாள்வினவப்புண்ணியனன்றுரைத்ததிற
மருந்தவர்க்கேயாவதெனநினைந்துரைப்பானாயினன். (௨௦)

வேறு.

புவனங்களனைத்துமீன்றபொங்கருளெம்பிராட்டி
கவனமால்விடையாறூழ்ந்துகாயாரோகணஞ்சிறந்த
தெவனதிவ்விருப்பமுற்றாயெனக்குமேனமேல்விருப்பா
மவனியிற்சிறந்தயாவையருளெனவுறையலுற்றான். (௨௧)

பனிவரைதவஞ்செய்தீன்றபானமொழியணங்குகேண்மோ
கனிவளனமைந்தவிந்தக்கயிலாயவரையேபோல
முனிதலில்விருப்புவாய்ந்ததலம்பலமொழியவற்றி
லனிவிருப்பமைந்ததொன்றேநவின்றமற்றவைவிரிப்பாம். (௨௨)

மிடையபலபறம்புமொவ்வோர்விசேடணங்கொண்டேமேவ
வடைமொழியொன்றுஞ்சாராதமொருபறம்புமுண்டா
லுடைதிரைப்புவிவாழெந்தவுயிரடைந்திறந்தபோதுந்
தடையிலெம்முருவநல்குந்தனிப்பெருந்தலமுமுண்டால். (௨௩)

மன்னுமிவ்விலங்கலென்றும்வடகயிலைப்பேர்மேவத்
துன்னுதென்கயிலையாகித்தூர்த்தவக்காளத்தி
யென்னுமிவ்விரண்டுமன்பினிகலுபுபூசையாற்றப்
பன்னுமவான்பெறுநல்கிப்பதியுமோசிலம்புமுண்டால். (௨௪)

நிறையெனுமாவினிழல்வடுவிலாநமக்குநீசெய்
மறைவிலாவடுக்கடாங்கிவாழ்தருவைப்புமுண்டா
லறையொருபிறப்புமில்லேமம்மையென்றழைக்கப்பெற்று
ளறைசிலம்போதைகேட்கவாடுமோர்தலமுமுண்டால். (௨௫)

உரைசெயுமுலகமெல்லாமுடையநாமொற்றியென்று
நிரைவரிநெருக்கித்தீட்டநிலவுமோர்தலமுமுண்டாற்
றரையகஞ்செழிக்குமாறுதவாப்பெருஞ்சந்தைகூட்டி
வரைவறுமோத்துநல்கவயங்கியதலமுமுண்டால். (௨௬)

பொருந்தொருகழுகுகாணுப்புனன்முடியுடையநம்மை
யிருந்திருகழுகுமுற்றுங்கண்டிறைஞ்சிறும்புமுண்டாற்
றிருந்துபாதிரியின்மேலோர்புலியுறவெறிந்தங்கீழால்
வருந்தொருமுடம்படுங்கான்முயலுறூம்வைப்புமுண்டால். (௨௭)

கடன்முழுதழற்றும்வெய்யகணையுடைக்கணையொன்றேவி
யடல்கெழுபுரங்கண்மூன்றுமட்டமாத்தலமுமுண்டான்
மிடல்கெழுகடவுளர்க்கோர்வெய்யவெங்கூற்றமாகி
யுடலுமந்தகனைச்சூலமுண்டதோர்வைப்புமுண்டால். (உஅ)

முறையுணராதுபாதமுண்டகஞ்சடிலக்காட்டை
யுறைமாவும்புள்ளுந்தேடியுழன்றதோர்வெற்புமுண்டா
லிறைதருகவுமாரத்தினிங்குருநீயுநாமு
மிறைதபுவிருத்தருபமேவிவாழ்சிலம்புமுண்டால். (உகூ)

புலியதளரையிற்சூழ்ந்துபொங்குபாம்பெங்குமேற்றிப்
புலியொடுபாம்புங்காணநடஞ்செயும்புரமுமுண்டாற்
கலிகடலெழுந்தகாலைக்கலங்குருவண்ணநாமே
கலிதவிர்தோணிவிட்டுக்கலந்தமர்பதியுமுண்டால். (௩0)

வாதமுற்பிணிமூன்றேடுமலப்பிணிமூன்றுந்தீரப்
போதமண்வாயில்விட்டுப்பொலிந்தமர்தலமுமுண்டா
லோதரும்வனப்புவாய்ந்தவொருமதன்மேனிமுற்றுங்
கோதவெந்தழல்விருந்துகொளத்தருதலமுமுண்டால். (௩க)

மருவொருகொம்புதாங்குமார்புடைநமைப்பூசித்துப்
பொருகரிகொம்போர்நான்கும்பெறப்பொலிதலமுமுண்டாற்
கருநிறத்திருமாறேடிக்காணொணாக்கமலப்பூவோர்
ஒருகுடைமறலிமார்பிற்சேர்ந்ததோர்தலமுமுண்டால். (௩உ)

வெயின்மணிகொழிக்கும்வண்காவிரித்துலாத்தீர்த்தமாடி
மயிலுருவொடுநீநம்மைவழுத்தியதலமுமுண்டாற்
பயிலொருமதமாலியானைபகர்திகம்பரநமக்குக்
குயின்மொழிமடந்தாய்போர்வைகொடுத்ததோர்தலமுமுண்டால். (௩௩)

கெடாதுற்றபுனற்காவேரியிடைக்கிளர்ந்தொருநீபோற்ற
வடாதுத்தாலகவனப்போர்மருவியதலமுமுண்டால்
விடாதற்பினொன்பான்கோடிசித்தர்கள்விழைந்துபோற்றப்
படாதுற்றவரசினீழற்பதிதருபதியுமுண்டால். (௩ச)

உருத்திரர்பதினோர்கோடியுள்ளவரொருங்குபோற்றத்
திருத்தகுமருதினீழற்சிவனுமோர்தலமுமுண்டா
லருத்தியின்மகளிர்கங்கையாதிநீராடுமாறு
பெருத்தகும்பத்திற்றோன்றிப்பிறங்குமோர்தலமுமுண்டால். (௩ரு)

முருக்கைநேரிதழ்மடந்தாய்முடியினோராறுமன்ன
விருக்கையோராயாறென்னத்தியைந்தவோர்தலமுமுண்டாற்
றிருக்கைமாய்த்தனைத்துங்காக்குந்திறத்தியாமொருதாயாயோர்
கருக்கையாவாறுகாத்துக்கலந்தமர்பொருப்புமுண்டால். (௩௬)

அருவத்துநீயுநாமுமன்னியமாவதன்றி
யுருவத்துமவ்வாறென்னவோங்குமாத்தலமுமுண்டாற்
பருவத்துமடந்தாய்பூமேற்பசுவன்றிவான்மேற்றங்குந்
திருவததோர்பசுவைக்கொண்டுசிருட்டிசெய்தலமுமுண்டால். (௧௭)

உற்றவன்பினர்செய்வேலியொன்றுளாநாமைவேலிப்
பொற்றளியாதிகொண்டுபொலிதருதலமுமுண்டா
லற்றமிலன்புவாய்ந்தாரியாவரும்புகலுமொன்று
பெற்றவண்சிறப்பினோங்கிப்பிறங்குறுதலமுமுண்டால். (௧௮)

கொடுமைசெய்களிற்றைமாட்டிக்குலவுநீமுநதியீன்ற
வடிவுறுகளிறுபோற்றிவழிபடுதலமுமுண்டா
னெடுமறையனைத்தும்வெவ்வேறுருக்கொடுநிரம்பப்போற்றப்
படுவரமிதயபாலகிப்பதிபெரும்பதியுமுண்டால. (௧௯)

விடாடைவடுவுமற்றும்விரும்பிநாமமுதுசெய்து
படாடையாமலன்பற்புரநதவானபதியுமுண்டா
லிடர்தபுதுருவாசப்பேரியன்முனிவரறகாவின்ப
மடர்திருநடனஞ்செயதவருமபெருநதலமுமுணடால். (௨0)

பண்ணியகலைகள்போலப்பகராறுபத்துநான்கு
புண்ணியவாடல்செய்துபொலிதருதலமுமுண்டான்
மண்ணியமணிநேரன்புவாய்ந்தவளொருதியாற்ற
வண்ணியகபோலக்கிள்ளோடமர்தருதலமுமுண்டால். (௨௧)

திருகுகோட்டுதளுக்குற்றசென்னியும்யானைக்குற்ற
பெருகுதோலுடம்புந்தீர்த்துப்பிறங்கொருதலமுமுண்டா
லுருகுமோர்கௌரிக்காமூவுருவுகொண்டுற்றநாநதோ
மருகுமோர்காளையாகியமர்தருதலமுமுண்டால். (௨௨)

ஆயிலாரிறும்பூதெய்தாரரிமதர்மழைக்கட்பாவாய்
தாயிலாநமக்குவேயேதாயாகுநதலமுமுணடா
ஞெயிலாவொருநளைமப்போனுவலருஞ்சிறப்பிற்றுகி
மாயிலாக்குறும்பலாவொன்றமர்வளததலமுமுண்டால். (௨௩)

தழுவியசிலையிராமனரக்கனைத்தடிந்தபாவங்
கழுவியவுவந்துபோற்றுங்காமருதலமுமுண்டால்
வழுவியவரக்கன்கைக்குவாராதிமாபலமேயாகிச்
செழுவியநமதுகோசஞ்செறிதருதலமுமுண்டால். (௨௪)

இவைமுதற்றலமனேகமிக்கயிலாயம்போலு
நவையறுமிவற்றுண்மேலாநாமமர்தானமொன்று
துவைமலர்க்குழலாயஃதுகுறித்தகாரோணமாகுஞ்
செவையுறத்துதிபயோர்க்கெல்லாச்சிததியுமெளிதினல்கும். (௨௫)

நாடுமிக்கயிலையாதிநின்றபஃறலங்கட்கெல்லாம்
பாடுகாரோணமேன்மைபடைத்ததெத்திறனுமென்னிற்
கூடுபேரண்டமெல்லாங்குலையுநாண்மூர்த்தியாவு
நீடுமத்தலத்தேவந்துநிரம்புதலாலென்றோர்தி. (௪௬)

அத்தலத்திடையுதித்தாரத்தலத்திடைவசித்தா
ரத்தலத்துயிர்விடுத்தாரத்தலத்தாசைவைத்தா
ரத்தலத்தெல்லைசூழ்ந்தாரத்தலத்தலர்துய்த்தாழ்வா
ரத்தலப்பெருமைதேர்ந்தாரனைவருமுத்தராவார். (௪௭)

கருதினவருளநாகைக்காயாரோகணத்தலத்தி
லொருகணம்வசிப்பாரேனுமுறுபலன்பெரிதாகின்
மருவுமற்றதனமேலாகவசிப்பவர்க்குரைப்பதென்னே
பொருவில்பஃறலத்தும்வைகும்பயனெலாம்பொருந்துவாரால். (௪௮)

அத்தலத்துயர்ந்ததானமகிலத்துமில்லையாகு
மூத்தலங்களினுமொத்ததுவெனமொழிவாரில்லை
கைத்தலமழுமானேந்துமெம்மையேநிகருநகண்டாய்
மைத்தலஞ்சனமுமோவவயங்குகார்க்கூந்தனல்லாய். (௪௯)

பலவிரித்தறைவதென்னைபகருமத்தலத்தைச்சார்ந்தார்
நலமருவெமைச்சார்ந்தாரோநவின்றதற்கையமில்லை
நிலவுமிவ்விசேடத்தாலேநிரம்பியபிரியம்வைத்தோ
மலமரலன்றிநீயுமமைத்ததனையறிதியென்றான். (௫0)

தலவுளநந்தியெம்மான்சனற்குமாரனுக்குச்சொற்ற
நலமுறவெடுத்துச்சொற்றருநயந்தவன்விழைவுநோக்கிக்
குலமுனிபுண்டரீகன்குறிமுதற்காட்சிபெற்று
நிலவியதுரைத்தவாறுதெரிதரநிகழ்த்தலுற்றாம். (௫௧)

தலவிசேடபடலம் முற்றிற்று.

ஆ படலம்-எ-இ திருவிருத்தம் - ௪௬௧.

புண்டரீகமுனிவர் முதற்காட்சியுரைத்தபடலம்.

நலமலியுநந்திபிரானுடுசனற்குமரமுனி
பொலமலியுஞ்சிவராசதானியெனும்புரத்தினுக்குக்
கலமலியுங்கடனாகைக்காயாரோகணமெனும்பேர்
நிலமலியும்படிசொலலென்னிகழ்த்துகெனநேர்ந்துரைப்பான். (௧)

அறமனைத்துநகுடிகொளுநங்கையம்பிகையண்ணலைவணங்கி
மறமனைத்துந்தவிர்தலத்தின்மான்மியங்கேட்டுளமகிழ்ந்தேன்
திறமனைத்தும்புணர்வினையத்தலத்தடைந்துசேர்ந்தவர்யார்
நிறமனைத்துந்தருமதுவுமுரைத்தியெனநிகழ்த்திடுவான். (௨)

புரையெறியும்பெருங்குணத்திற்புண்ணியப்பூங்கொம்பேகேள்
வரையெறியும்பன்மணியுமால்யானைக்கோடுகளும்
விரையெறியுமொண்மலருமேதகுசந்தனக்குறடுந்
திரையெறியும்யமுனையெனுந்திருத்தகுமாநதிக்கரையில். (௩)

சாதமறைமுழங்கொலியுஞ்சாலையழலோம்பொலியும்
போதவமரரையவியூண்புசிக்கவழைத்திடுமொலியு
மேதமின்மங்கலவொலியுமென்றுமெழுகடலொலியாம்
வேதபுரமெனும்பெயரின்விளங்குமொருதிருநகரில். (௪)

வழிவழிநம்மடிக்கன்பேவயக்கிவருபெருங்குணத்தா
லிழிவுசிறிதேனுமுறுதெஞ்ஞான்றுமுயர்வேயுற்
றொழிவரியகண்ணோட்டமொப்புரவாதிகடழுவிக்
கழிபுகழினனிபொலிநறுகமழ்கற்ககோத்திரத்தில். (௫)

மறைமுழுதும்வடித்துணர்ந்தானங்கமுமாண்புறத்தெரிந்தா
னிறைதருமாகமக்கடலுநீந்தினானல்லொழுக்க
முறைநெறியிற்றலைநின்றான்முனிவருநந்தமையுணர்ந்து
கறைகெழுபல்பவமுமறுகருத்தமனென்றொருமறையோன். (௬)

அந்தமுனிவரன்றவத்திலான்றபாற்கடலுதித்த
சந்தமதியெனவுதித்தான்சதுர்வேதமுதலாக
வந்தகலைபற்பலவும்வடித்துணர்ந்துதந்தையினு
நந்தவறிவினிற்சிறந்தானல்லொழுக்கந்தலைநின்றான். (௭)

நம்மடியர்தமைக்காணினுமென்றேயுபசரிப்பான்
செம்மலர்மேலயனுதித்தேவருளுமிணையிலலான்
விம்மலறுபெருந்தவமேவிளைந்தநலைவருமு[illegible]கைப்
பொம்மல்படைத்துயர்ந்தோங்குபுண்டரீகப்பெயரான். (௮)

அன்னமுனிவரன்றந்தையாயகருத்தமற்பணிந்து
சொன்னபவத்துயரகற்றித்தூயசாயுச்சியமா
நன்னரமைமுத்தியினைநயந்தளிக்குங்கடவுளெவன்
மன்னவுரைத்தருளென்றான்மற்றவனுண்மகிழ்ந்துரைப்பான். (௯)

உரவில்விடயாதிகளினுழலிளமைப்பருவத்தே
கரவுதவிரின்பமுத்திகாதலித்தாயம்முத்தி
விரவுதிறலினனீயேவீடுமுதல்யாதானும்
பரசிவனையல்லாதுபாலிப்பாரிலையுணர்தி. (௧௦)

சங்கரனாலெவ்வுயிர்க்குந்தாவில்சுகங்கொடுத்தலினாற்
பங்கவியசனந்தவிர்க்கும்பண்பினாலுருத்திரனே
யங்கணருள்பொழியம்பைசமேதனாயமர்தலினாற்
றுங்கமிகுசாம்பனெனச்சொல்லுவாரறிவுடையோர். (௧௧)

நிலமுரத்துத்தரித்திடலுநீர்குளிர்ந்துபதஞ்செயலுங்
கலவழல்சுட்டொன்றுதலுங்கால்சலித்துத்திரட்டுதலும்
வலனமைவிண்ணிரந்தரமாயிடங்கொடுத்துமருவுதலு
மலமரலிலருட்பெருமான்கட்டளையென்றறிமைந்த. (கஉ)

இரவிமதிமுதலாயகோள்கடகவியங்குதலுங்
கரவறமீன்புணர்பரவைகரைகடவாதடங்குதலும
புரவமையும்புவனங்கள்போவதுவுமாவதுவு
மரவணியுஞ்சிவபெருமானாணையெனவறிமைந்த. (கங)

மறைகளவன்வாய்மொழியேமறைகளவனவந்தியரே
மறைகளவன்பாதுகையேமறைகளவன்காற்சிலம்பே
மறைகளவனூர்பரியேகாணுதுமயங்குதலு
மறைகளெனிற்சிவபெருமானமான்மியநாவென்னுரைக்கேன். (கச)

எங்குமவன்றிருமுடியேயெங்குமவனதிருமுகமே
யெங்குமவனுலோசனமேயெங்குமவனகுழைச்செவியே
யெங்குமவனசெவ்வாயேயெங்குங்கையேபதமு
மெங்குமெனிற்சிவபெருமானேறநாவென்னுரைக்கேன். (கரு)

புனையுருவெட்டொன்பதுமுற்புணர்ந்துமோருருவுமிலன்
வினையொருநானகொனறியற்றிமேவிலுமோர்வினையுமிலன்
புனையிழையோர்பான்மருவப்பொருந்தினும்விகாரமில
னனையபிரானுண்மைநிலையாரியம்பவல்லவரே. (கசா)

மண்ணிடையைந்தாயமாநதாணீரிடைநான்காய்வதிந்தான்
தண்ணிடைதீயிடைமூனருய்க்காலிடைமற்றிரண்டாய்
விண்ணிடையொனருயமைநதானுனும்விளம்பியவை
யெண்ணிடைவதல்லாமலினனனெனவுணர்வனவோ. (கஎ)

கூற்றுவனசெய்கொடுந்தண்டங்குறித்துய்யக்குறித்தவர்க
ளேற்றுமிசைவருபெருமானடியனறியெண்ணுவரோ
போற்றுமறையாகமபுராணமெலாம்புகல்பவர்தோங்
காற்றுவலியமைகாலகாலனெனதறுதிதலினால். (கஅ)

வண்ணியபூங்கணைமதவேளிரவுபகலாவியற்றுங்
கண்ணியவெந்துயரனைத்துங்கடந்துய்யவுளங்குறித்த
புண்ணியர்களவனையனறிபபிறரையும்பூசிப்பர்கொலோ
தண்ணியநூலெலாங்காமதகனனெனமுறையிடலால். (கசு)

மேயபலதுயரமெலாம்விரைந்தெழுவான்றேற்றிவித்
தாயபிறப்பொழித்திடுவானமையவுளத்திடைக்குறித்த
தூயமதியினர்சிவனையல்லாதுதுதிப்பர்கொலோ
பாயமறைபிறப்பிலியென்றெடுத்துரைக்கும்பான்மையினால். (உ0)

அரியகடவுளாராயவரிபிரமாதியர்க்கெல்லாம்
பெரியபிரான்சங்கரனேயென்றறிஞர்பேசிடுவார்
தெரியமுரசறைந்ததெனச்செகமுழுதுமவாய்க்கேட்க
வுரியமறைமாதேவனெனுந்திருப்பேரோதுதலால். (உக)

பிரணவத்திலுரியபொருள்பிறவொன்றுபேசிடுவார்
முரணவித்தற்காகமங்கண்முதலாயவேண்டுபவோ
கரணவிகற்பங்கடப்பாய்காவதமெண்ணிலகமழுந
திரன்மிகுத்தசெழுங்கொன்றைமாலிகைசேர்தரக்கண்டும். (உஉ)

வேதகாயத்திரியின்பொருளாகும்வித்தகரார்
போதநாயகனைபொங்கொளிச்சம்புவையனதி
யேதநீவாதமரும்யாவரையும்புகனறிடலா
மோதவாம்பற்கனெனுமொருமொழிநள்ளமையாதேல். (உங)

மும்மறையுணடுமறையின்முனிவிலெழுகாண்டநிற
செம்மைதருநடுக்காண்டஞ்சோநதவெழுசங்கிதையி
லம்மநடுச்சங்கிதையிலுதியீரெழுநதுநடுப்
பொம்மனுறவமர்மனுவினபொருளாவானெவன்மைநத. (உச)

திருத்தமிகுமறைமுடிபாய்த்திகழ்தருகாலாக்கினிசா
ருருத்திரப்பேருபநிடதமுதலாயவுரைப்பதெலாம
வருத்தமறவுலகனைததுமிளைப்பொழிதருமாதேவன்
பொருத்தமுறமெய்ப்பூசுபுண்ணியநீறேபிறிதோ. (உரு)

பிரியமிகவனைத்தினுக்கும்பிரமாணமாயமறை
தெரியவெடுத்தினிதுரைததல்சிவலிங்கார்ச்சனையொனறே
யுரியவெனப்பிறர்வடிவமுரைத்ததுமற்றுண்டுகொலோ
வரியதவத்திருமைந்தவறைவதெவனிதனமேலும். (உசா)

ஆதலினம்பரசிவனையரிபிரமாதியர்பல்லோர
காதலிற்பூசனைபுரிநதுகருதியதெய்தினரினனு
மேதமறயானைமுதலெறும்பீறுதியபலவுட்
போதமுறப்பூசித்துப்பொலிநதவைக்கோரளவுண்டோ. (உஎ)

இன்னுமுயர்பரசிவனையிருதிணையினுயிரனைத்து
மன்னும்வழிபாடியற்றிவயங்கியவைக்கறிகுறியா
மின்னுபலதலம்பொலியுமன்றியிளிரனையபிரா
னன்னுமொருவரைப்பூசையுஞற்றியதுமுண்டுகொலோ. (உஅ)

விச்சுவமென்றெடுத்தியம்பவிளங்குவானொருமுகுநதன
விச்சுவத்திற்கதிகனெனவிளங்குவானபரமசிவ
னைச்சமெனயாவர்களுமியம்புவார்மாயவனை
யெச்சவதிபதிசிவனேயெனப்புகலுமெம்மறையும். (உகூ)

பரசிவனேபிரமமெனப்பன்மறையுமெடுத்தோது
முரணிலாரையும்பரமென்றேத்திடுவதென்னையெனில்
விரவுமுபசாரமேயன்றியுமேவுயிர்ப்பரப்பின்
றரமுணர்ந்தும்போலுமெனச்சாற்றுவார்சான்றோரே. (௫௰)

படைத்தலொடுகாத்தலுநம்பரமசிவன்புரிதொழிலே
படைத்தலயன்றொழிலென்னிற்பாறியவோர்தலையின்னும்
படைத்தறணக்கியற்றுகிலான்மால்காப்பனெனப்பகரிற்
படைத்தமகாருறுபபழிவுமுடம்பழிவும்பார்த்திருந்தான். (௫௧)

எம்பெருமானித்தியமுமேனையோரனித்தியமு
நம்பமையமறையாதியெடுத்துநவினறிடவேண்டா
கம்பமுறவருகற்பகாலங்கடோறுங்கவாநத
வம்பதுமன்முதலியர்தந்தலைத்தொடையேயறிவிக்கும். (௫௨)

ஆயமலரவனுதியமராலாம்பசுக்களே
மேயபசுபதிசிவனேவிளம்புவதெனினனுங்கே
ணேயமிகுமாதேவநின்மலன்வான்பரவையிடை
மாயவனுதியரொருநிவலையாமெனறுணருதியால். (௫௩)

அந்தமாதேவனேயகிலகாரணன்காண்டி
பந்தமுமற்றஃதொழியப்பற்றுமொருபெருவீடு
நந்தவனருளன்றிநஞ்ஞானணனுவாநெடுவா
னுந்தவமைபசுநதோலிறசுருட்டும்வலியுளராவார். (௫௪)

மன்னியவப்பரசிவனையவனமர்மாத்தலநதடைந்து
நன்னியமத்தொடுபோ[illegible]ிககருதியதுநன் கடைவாய்
முன்னியநின்கருமமிடையூறின்றிமுற்றுகவென்
றன்னியமில்கருத்தமனன்கருளிவிடைகொடுத்தனனே. (௫௫)

வேறு.

தந்தை[illegible]ாருளாத்தவார்த்தைதலைகொடுபுண்டரீக
னிந்தைதீர்தலத்தின்மிககதெதுவெனநினையுங்காலை
முநதையோர்பலருங்காசிமுழுநகரடைதியெனனச
சிந்தைகூர்களிபயிறேடத்திருத்தலம்வநதுபுக்கான. (௫௬)

ஆனநதவனத்துமேயவளமெலாமனமயநோக்கி
யானநதம்பயப்பதற்கோரையமின்றென்றுதேர்நதே
யானந்தவறமுண்டாக்குமற்புதக்கவகையாடி
யானந்தவுருவமாநம்மருட்குறிபணிநதெழுந்தான். (௫௭)

கங்கையினன்னீராடல்காலங்கடோறுஞ்சார்ந்து
செங்கையின்மழுமானேந்தித்திகழுநங்குறிசேவித்த
லங்கைகயிற்கண்ணூய்நீயாமன்னபூரணியைப்போற்றல்
சங்கைபினியமங்கொண்டான்றவத்துயர்புண்டரீகன். (௫௮)

இந்தனன்னியமம்பூண்டேயிராயிரவருடங்காறு
நந்தவெம்பொறியடக்கலாதியநயந்துமேவும்
பந்தமின்முனிக்குக்காட்சிபாலித்தேமல்லேமாக
வந்தனன்முனிவனுள்ளத்தவலத்தாற்கவலலுற்றான். (௧௯)

இரங்கிடுகாலைவாமதேவமாமுனியாங்கெய்தி
வரங்கிளரொருநீநெஞ்சமாழாநதென்னையென்னப்
பரங்கிளருடம்பினோடுமுத்தியிற்படர்தல்வேட்டேன்
கரங்கனன்மழுவேந்தண்ணல்கருணைசெய்திலனின்னும். (௨௦)

அதுகுறித்திரங்குகின்றேனையனேயென்றானன்னான்
விதுமுடிப்பெருமானிங்குவீந்தார்க்குத்தன்சாரூபங்
கதுமெனக்கொடுப்பதன்றிக்கருதியதளித்தல்செய்யான்
மதுமலர்ச்சூதக்காஞ்சிமாநகர்குறுகுகென்றான். (௨௧)

மொழிபுகழ்வாமதேவமுனிவன்சொலுள்ளங்கொண்டு
கழிதவப்புண்டரீகன்காஞ்சிமாநகரஞ்சென்று
பழிதபுகம்பையாதிப்பறபலபுனலுமாடி
யிழிவறுசூதநீழலெம்மையாங்கிறைஞ்சினானே. (௨௨)

கறைதபுகாமக்கண்ணியெனும்பெயர்கலந்துவாழு
மறைபுகனினையும்போற்றிவழுத்துமத்தலத்தின்கண்ணே
முறைமையினொருகாரோணமூர்த்தியைத்தாபித்தன்பிற்
பொறைமிகவாண்டென்னீராயிரம்பூசித்தானால். (௨௩)

ஆங்குநாங்காட்சிநல்கேமாயினேமதுதெரிநது
பாங்குசால்புண்டரீகன்படருற்றுத்துயருங்காலை
யீங்குமேவினருடம்போடுறுமுத்தியெய்தாதாரும்
வீங்குபோகாதியாவும்வீசுதல்கூடுமோர்தி. (௨௪)

ஆதலிற்கும்பகோணமடுத்துநீபூசிப்பாயேற்
காதலிற்பெறுவாயென்றுகருதசரீரியாறு
மோதலிற்களிப்புமேவியொருகும்பகோணஞ்சார்ந்தான்
போதலிற்கருதன்முற்றப்புணருமென்றுள்ளங்கொண்டே. (௨௫)

மன்றுமத்தலத்தின்மேலாமாமகதீர்த்தமாடித்
துன்றுநநதிருமுனும்பொற்றாமரைப்புனலுந்தோய்ந்து
பன்றுநங்குறியும்போற்றிமங்களைப்பெயர்பரித்து
மின்றுநின்றனையும்போற்றிமற்றவும்விருப்பிற்றாழ்ந்தான். (௨௬)

எண்ணியவாங்குங்காயாரோகணலிங்கந்தாபித்
தண்ணியவன்பினெண்பானுயிரவருடம்பூசை
பண்ணியமுனிவனுக்குப்பருவம்வந்துறுமையாலே
கண்ணியுத்தருளாவண்ணமிருநதனங்கருங்கட்பாவாய். (௨௭)

இத்தனையாண்டிப்பூசையியற்றியுமிருவர்தேரு
வத்தனையடியர்க்கெய்ப்பில்லைப்பெனவருளாறுதி
முத்தனையடையப்பெற்றேமலமென்றுமுனிவன்வாடிப்
பித்தனைநிகர்ப்பமேன்மேற்பேதுறுகினறகாலை, (௪௯)

கண்ணுவமுனிவன்றோன்றிக்கருதியதடையவேண்டி
லெண்ணுவதினியொன்றின்றியிரங்குகீழ்ப்பரவைக்கோட்டி
லண்ணுவமானமில்லாவாதிபுராணஞ்சார்ந்து
பண்ணுவதாங்குச்செய்யிற்பலித்திடுநினைத்ததென்றான். (௫௧)

முனியுரைதலைமேற்கொண்டுமொய்வளக்குடந்தைநீத்தே
யினியதுசெய்வேனென்றுச்சிவராசதானியென்னும்
பனிமலர்ப்பொழில்சூழாதிபுராணமாத்தலம்படர்ந்து
துனிதவிர்தேவதீர்த்தமுதற்பலபுனலுநதோய்ந்தான். (௫0)

பொருந்தவங்கமருமாதிபுராணப்பேரொமையுமேன்மைக்
கருந்தடங்கண்ணியெனனக்கலந்தமர்நினையும்போற்றித்
திருந்தும்வண்சருவதீர்த்தத்தெனமேறகாச்சிரமஞ்செய்தாங்
கருநதவர்தொழுங்காரோணலிங்கமும்பதிட்டையாற்றி. (௫௧)

அநதமாவிலிங்கத்திற்குமளபபருமன்புபொங்கச்
சந்தமென்மலர்களாதியாவையுநதழீஇப்பூசிதது
பநதமுற்றொழியுமாறுபரவிநன்கமாமுனிகருக்
காநதமென்மலர்ப்பூங்கோதாய்காட்சிதநதருளினைமால். (௫௨)

காட்சிதந்தருளலோடுங்கதுமெனவடியில்வீழ்ந்து
மாட்சிசாலன்பர்வாழ்வேவருபவப்பிணிமருநதே
மூட்சிசால்விருப்பிற்பன்னுணமுயன்றனனின்றாள்காணப்
பூட்சியோடடியேனின்னைப்புணர்திறமருளாயென்றான். (௫௩)

முன்னியபுண்டரீகமுனிவநம்மூனாறுங்காட்சி
மன்னியகாலத்தெண்ணம்வாய்த்திடப்பெறுவாயென்று
நன்னியமத்தவற்குநாஞ்சொல்லிமறைநதேம்யாரும்
பன்னியவிலிங்கதநுளளாற்பணிவமாயநததோகாய். (௫௪)

உரைத்தருளியசொற்கொண்டேயுறுவரரேறுபோல்வான்
விரைத்தபூம்பொழில்சூழாங்கேமேவிநோற்றிருந்தான்மாண்பாற்
புரைத்தராமெழுவாய்க்காட்சிபுணர்த்தியதுணர்தியென்று
ரைத்தசாந்தளாயகொங்கையம்மையுள்ளுவகைபூத்தாள். (௫௫)

பந்தமில்புண்டரீகப்பனவனுக்கெழுவாய்க்காட்சி
தந்தமையெடுத்துச்சொற்றுஞ்சிவராசதானிமேய
வந்தமிலனையமூர்த்தியணிகிளரிரண்டாங்காட்சி
நந்தனன்கருளுமாறுகாமினியுரைக்கலுற்றும். (௫௬)

புண்டரீகமுனிவர்முதற்காட்சியுரைத்தபடலம் முற்றிற்று.

ஆக படலம்-அ-இ-திருவிருத்தம்-௫௬௬.

புண்டரீகமுனிவரிரண்டாங்காட்சியுரைத்தபடலம்.

பொருவுதவிர்சனற்குமரனந்திபிரானடிவணங்கிப்புண்டரீகன்
வெருவுதவிர்சிவராசதானியாச்சிராமத்துவிருப்பின்மேவி
மருவுதவிராவிரண்டாங்காட்சிபெற்றவரலாறும்வகுத்தியென்ன
வொருவுதவிர்நயசுகுணத்தனையன்மனமகிழ்ச்சிமிகுந்துரைக்கலுற்றான்.

சிற்றுதரம்வருந்தாமலண்டபகிரண்டமெலாஞ்செழிக்கவீன்றுஞ்
சற்றுமொருதளர்ச்சியுறாதிளங்கன்னியாயமருஞ்சயிலப்பாவை
கற்றாரவில்புகழ்முனிக்குநீயிரண்டாங்காட்சிதந்தகருணைகேட்கு ம்
பற்றுமிகுந்தனனெனப்பல்லுலகுமுய்யவிடமுண்டபரமன்கூறும். (௨)

மாண்டதவப்புண்டரீகப்பெருமாமுனிகிரியைவழுவாதாற்ற
நீண்டமனமுடையானாய்வைகறையிற்றுயிலெழுந்துமிகரிலாமை
யாண்டநறுந்தேவதீர்த்தங்குடைந்துவெள்ளியநீறணிந்துமேன்மை[வான்
பூண்டமணித்தொடைபுனைந்துபிடகைகொடுநந்தவனம்புகூஉப்பூக்கொய்

நந்தியாவட்டமாதளைசந்துகூதாளநரந்தநாவல்
புந்திகூர்மாலூரமந்தாரமாஞாழல்புன்னாகஞ்செவ்
வந்திபாடலங்கன்னிகாரமாமலகமார்மாயோன்காந்தி
முந்தியாம்விழைகொன்றைதேங்கொன்றைவகுளநீர்முள்ளிகாஞ்சி. (௪)

சிந்துவாரங்குரவஞ்செவ்வகத்திநீர்மிட்டான்செருந்திவேங்கை
நந்துநாயுருவிபொன்னாவிரைகுருந்துவன்னிகுசைநாணல்காயா
முந்துமோரிதழ்க்கமலம்வழைகொக்குமந்தாரைமுளரிநான்றி
யுநதுபொன்னூமத்தைகூத்தன்குதம்பைசெவ்வரத்தமுயரசோகம். (௫)

மருவருக்கம்வெட்பாலைவெள்ளிலோத்தம்பூளைமாவிலிங்கம் [ரை
கருவிளம்பன்னீர்திலமார்பலாசு பட்டிபருத்திவெண்காக்கணஞ் செங்கீ
யொருகுவளைசேதாம்பல்சதகுப்பைவெட்சிதழாயோங்குவாகை
கருநிறத்தமலர்ச்செம்பைகண்டங்கத்திரிகிளுவைகரந்தைகாரை. (௬)

கொழுந்துவிளாவலரிதுரோணங்காந்தள்வெட்டிவேர்கோட்டந்தாழை
யெழுந்துபொலிவிலாமிச்சவேர்மஞ்சணத்திகடம்பிரவிகாந்தி
செழுந்தகைவெற்றிலையறுகுகருங்காலிகுளவிபச்சைசிறந்தசாலி
தழுநதரமாரழிஞ்சில்வழுதுணைமயிலையொண்பாரிசாதந்தாளி. (௭)

வதரியெலுமிச்சைபுலிதொடக்கிநறுமல்லிகையவாங்குச்சிப்பு
லிதமிகுசண்பகமாதிப்பற்பலவுமிதப்பக்கொய்தெடுத்துக்கொண்டு [ஞ்
கதமிலொருதலையமைத்துமாலைபு மிண்டையுந்தொடையுங்கண்ணித்தாரு
சுதமினமையலங்கரிக்கத்தக்கபடிமுயன்றமைத்துத்தொகுத்தபின்னர், ()

வண்டுபடுமார்ங்கண்ணிவளவர்பிரான்முனிவர்பிரான்மாண்புதேர்ந்து
கொண்டுபரிசனம்பூசாதிரவியமுலேனையவுங்கொடுத்துவேண்டக்
கண்டுமகிழ்ச்சியிற்றமுவிக்கதிர்முதிர்முன்மஞ்சனநீர்கனிவிற்றெவ்வி [டு.
யண்டுவிறைதொறுவிரப்பித்துடிகருப்பூரம்பொடித்திட்டமைத்துக்கொண்

பலநிவேதனமமைக்கச்சிலரையேவிப்பசுங்கர்ப்பூரமாதிப்
பலவிராய்ச்சாந்தமைக்கச்சிலரையேவிப்புனிதம்பாத்திரங்கள்
பலவும்வாய்த்திடவியற்றச்சிலரையேவிக்கனிவுபரவப்பூக்கள்
பலவிராம்புனன்மீட்டுங்குடைந்துநீறணிந்துகண்மணிபராய்த்தரித்தே. ()

தெளிவளராய்பதமைந்துமுளத்தெண்ணியன்பொடுநற்றிருமுன்போந்து
களிவளர்நம்மனுவைநுபெற்றுவிதிவழியேபுண்ணியாகவாசனஞ்செய்
தளிவளர்கௌவியபூசையாற்றியமுதோரைந்துமமையப்போற்றி
யொளிவளரொன்பதுகும்பநிறீஇதொழுதழற்சருமமுஞற்றினனே. ()

ஒருமருப்பன்முதலாயதுவாரவானவர்பூசையுவந்துசெய்து
பொருவரியகருக்கிரகம்புகுந்துவாரதிபூசைபொலியவாற்றிப்
பெருவலியிற்பூதசுத்திதானசுத்திமனுச்சுத்திபெருக்கம்வாய்ந்து
மருவுதிரவியசுத்தியிலிங்கசுத்தியோரைந்துமாண்பினாற்றி. (க௨)

சொற்றபாத்தியமுமாசமனமுநல்லருக்கியமுநாதாய்தாபபண்ணி
யுற்றவாதாரசத்திமுதற்சத்திமண்டலமீறுறப்பூசித்துப்
பற்றவாவாகனமுநதாபனமுமுளத்தனபுபதியவாற்றி
மற்றவாறைந்தன்மேலெட்டங்கநியாசமுநனமாண்பினாற்றி. (க௩)

கூறுசந்நிதானமொடுசநநிரோதனமவகுண்டனமுஞ்செய்து
பேறுதருநற்றேனுமுநதிரைமுற்பற்பலவும்பிறங்கநல்கி
வீறுகெழுபாத்தியமாசமனமருக்கியங்கொடுத்துவேலையேழு
மாறுகொடுமுழங்கியனவியமுழங்கவபிடேகமாண்பிற்செயவான். (க௪)

ஆன்றநறுந்தயிலமாநெல்லியரிசனங்குடஞ்சுட்டமைந்தவைந்து
சான்றவமுதைந்துநெய்பாறயிர்சுவைத்தேனயிரரம்பைதழைவருக்கை
யென்றநறுஞ்சூதமுயாகருபபஞ்சாமிலிகுசத்தினெடுத்தசாறு
தோன்றநரந்தக்கனிமாதுளங்கனிதமரக்கனியிற்பெருகுத்தசாறு (க௫)

மேயவிளநீரடிசில்சந்துதபனங்கங்கைகவில்வச்சாறு
பாயசகத்திரதாரைசிருங்கம்வலம்புரிமுறைமையபப்பவாட்டி
யேயமுறவாட்டுதொறுமிடையிடைச்சுத்தோதகநனனிவேதனூதி
யாயபுரிநதொற்றுடையிட்டுமிளிர்பரிவட்டமலங்கச்சூழ்ந்து. (க௬)

தூயவுபவீதமெடுத்தணிந்துமணிமுடிகுழைபொற்சுடர்க்கேயூர
மாயவொளிபடுவயிரகடகமணிமதாணியொளிராழிநான்மு
னேயமலிதரச்சாத்திநீறுடுசாந்தணிந்துதொடைநிரம்பச்சூட்டிப்
பாயநறுந்தூபமொளிர்தீபமெடுத்தறவயக்கிப்பண்புமேவ. (க௭)

நாடுதளவரும்பனசுத்தோதனமொண்பருப்படிசினன்பாற்சொனறி
நீடுகுளப்பொம்மல்புளிபடுமிதவைதிலமூரனெய்யினோடு
கூடுசருக்கரைவல்சிமரிசயினிததிமடைகுய்கோலச்செய்து
வாடுதலில்சுவைக்கருனைபாகரிலட்டுகந்தோசைவளங்கூர்பிட்டு (க௮)

பண்ணியமோதகமுழுந்தவடையினியரோலைமற்றும்புகாபூபர்
தண்ணியதெங்கிளநீரின்குளநீர்வண்புழநீர்மோர்சார்ந்ததுநீர்
கண்ணியவொண்சுத்தநீரிலவையனைத்து மொரோரொவொன்ருக்கனிவிளக்கிப்
புண்ணியமாரருக்கியர்தாம்பூலமுகவாசமுறைபொலிவினிந்து. (கக)

விரைகெழுதூபங்கொடுத்தேயலடுக்குதீபமுதல்விளம்பாநின்ற
புரையில்பலவாகியவாராதனமும்புரிந்துமணப்பூக்கலிக்
கரையுநீராஞ்சனஞ்செய்தபின்பளிதவிளக்கெடுத்தாக்கனிவுமேவ [தி
வுபருத்திவித்தொடுவேப்பிலைசுழற்றியெறிந்துவெண்ணீறெளிரச்சாத்

திருந்துதருப்பணங்கவிகைவெண்கவரியாலவட்டஞ்சிவிறியாய
பொருந்துமிவைநேர்வயக்கிப்புதுமலரக்கதைசாத்திப்புனிதந்தீரா
திருக்துதிகழருக்கியமுமீந்துபலமலரிடக்கையேநதிச்சன்ம [னி.
மருந்துபுரையைந்தெழுத்தும்வலக்கையிற் கண்மணிமாலை வாங்கியெண்

ஆயவினிதாகியநம்மடிமலரிற்சாத்தியபினட்டாங்கத்தி
னேயமிகப்பணிந்தெழுந்துதுதித்துவெளிவநதொருசார்நிலவமேவிப்
பாயநமதருளுருவங்குறித்தமர்ந்துபின்னெழுந்துபணிநின்ருர்க்கு
மேயபிரசாதநல்கிவிதிப்படிநின்னையும்பூசைவிரும்பிச்செய்வான். (உஉ)

காலைவளச்சுரதீர்த்தம்படிந்திவ்வாறியற்றியவக்ருத்ரமன்சேய்
பாலைநிகர்மொழிமடவாய்முனிதீர்த்தமுழுதுபுனல்பகலாமுச்சி
வேலையின்முன்சொற்றபடியெமையுநினையுமபூசைவிழைந்துசெய்வான்
மாலையில்வண்காகநீர்தோய்ந்துபூசனைபுரிவான்மகிழ்ச்சிபொங்க. (உ௩)

பொய்யிறெடுகூடாதபுண்டரீகப்பெயரோன்புக்கிலாய
மெய்யிறெடும்வீடடைவான்சறுவதீர்த்தம்படிந்துமேலோங்கன்பின்
மொய்யிறெடுவேண்டுவகொண்டத்தயாமப்பூசைமுயன்றுசெய்வா
னெய்யிறெடாங்குழலாய்நித்தியமிதுநைமித்தியமுநிகழ்த்தக்கேண்மோ.

பனிவரையின்முளைத்தமலர்ப்பசுங்கொம்பேநமக்சன்புபுரிப்பார்தம்மிற
புனிதநனியுடையவனம்மடியவனாநாமென்றேபுநதிசெய்வோ
னினியபுனருடனிப்போன்முனமொழிநதவளவன்வருமிடைபூரேட்டி
முனிவனுளமெப்படியப்படிநடக்குமொருவிரதமுன்போற்பூண்டான. ()

வேறு.

[டைப்
திருகுகோட்டுச்செழுந்தகர்த்திங்களில், வருகுணத்தநெய்வான்றிருநாளி
பெருகுவாசக்கொழுந்துபெருக்கியே,யுருகுமன்பினுஞற்றுவன்பூசனை. ()

கொழுவியிற்பெருங்குன்டைமீதிவரு,செழுமுறத்திருநாளிற்சிறப்புறத்
தழுவுசார்த்தக்கொடுபோற்றுவான்-வழுவிலாதமுனிமலைமங்கையே()

மேயதுயமிதுனமதியிடை, யாயவன்றிலடைதிருநாள்வயிற் [னே,
பாயருன்றுபழமுங்கொண்டேத்துவான், மாயவாழ்க்கைமற்றியாமுனிவ

கலைபடுங்காற்கடகமதிவரு, நலைவிலாதவுடைகுனநாள்வயிற் [லிஞுய்
செலைவிஞும்பயக்கொண்டுசிறப்பிப்பான், குலையருமலர்கொணடகுழ

பரவுகின்றபஞ்சானனத்திங்களில், வரவுமேவியமாயவருளிடை
விரவுசீரயிராணமிகப்போற்றுவான்,புரவுமேவிப்பொலியுநகைமாதராய்()

விரைகறுங்குழற்கன்னிமிளிமதிக், கரைசிறப்பிற்கடைக்குளநாள்வயிற்
புரையிலாதவபூபத்திற்பூசிப்பான்,வரையுதித்தபைந்தோகைமயிலனாய். ()

தொக்கமேண்மைத்துலாமதிவாய்ப்பகை, யுக்கநூலமுறுந்திருநாளிடைத்
திககவாவுபததிற்சிறப்பிப்பா,னக்கதாமரைபோனமுகநங்கையே. (௩௨)

துட்டனென்றுசொலப்படுந்திங்களி, லிட்டமாமறுநாளிலிலகுறப்
பட்டதீபம்பலகொடுபூசிப்பான, யட்டமாமுலைவாளவிழிமாதராய். (௩௩)

குனிசிலைப்பெயர்கொண்டமதியிடைப்,புனிதமாகியசெங்கைபொருந்துநா
ளினியவானநெய்கொண்டினிந்தநுவான,கனியுநாவைககமாபுமினசொல
விளாய். (௩௪)

திரையுலாமகரப்பெயர்சோமதிப,புரையிலாதகொடிறபுநர்சினர[ரததாய்.
முரைசிறநதசெநதேனகொண்டுவபபிபபான,றரைமுனையாமயுநதநதவுந·

கோலமேயகுடப்பெயர்சதிஙகளின, ஞாலமேத்துங்கொடுநசநாளிடைக்
காலவாயநெயககமபலஞ்சாத்துவா, னைமாநதகருஙகுழலேநதிழாய்

விடையமைந்துவெடி தெழுமீனமதிக, கடையெழுஞசனிநாளிற்கனிவுற
வுடைதூராததயிர்கொண்டவப்பிப்பா,னடையிறேதிமாளுறநாட்டுவாய்.

இந்தவாறுரைமிததியமெனபது, நநதநாளுநடாத்துநதிறலினன்
பாதமோவபபனவாகுலமெலா,முநவாறறுதவததினமுனைததுளான். ()

பிணையுமின்னவைபேணுவதனறிபுந,துணையிலாதவததுங்கமுனிவர
னணையுநாளொன்றறுகிலககமமிரண,டிணையிலாதவெழுநதைதந்துமெண்
[ணுவான. (௩௯)

புண்டரீகன்பொலியும்பெருநதவங், கண்டவானவர்கோனுட்கவலுறு
வண்டரோடினிதாயநறுசிதைததிடும,வண்டவாவுகைமாதரைக்கூவினன்.

அரம்பைமேனகையாதியமாதரா,வரம்பையோவியமாமைசுமந்துளார்
திரம்பைநாகஞ்சிதைததுமெல்குலா,விரம்பைமுனனருறநீதுமிகழ்தது
[வார். (௪௧)

வேதனுவியலைத்திடல்வேண்டியோ,வோதமீதிலுறங்குமுகுந்தனு [யோ.
மாதகாதெனவாறறுதல்வேண்டியோ,மாதவத்தரைவாட்டுதல்வேண்டி

இன்றுநீவிரெந்தம்மைவிளித்தது,குன்றுசெற்றநுலிசப்படையினு [ன்,
யென்றுகூறலுமிநதிரனோதுவ,தொனறுகேண்மினெனவுரைத்தன்மேயினு

குணகடற்பெருங்கூலத்தொருதலம்,புணருமாதிபுராணமெனும்பெயர்த்
தணவுமததலததாய்புண்டரீகன்செய், மணவருந்தவமாற்றுதிர்போமென்
[றுன். (௪௪)

என்றுகூறலுமித்துணையோவெனா,நின்றநக்குலத்தரமங்கைய [யார்,
ரன்றுவந்தனராதிபுராணைத்தைச்,சென்றுசேர்ந்தனர்வெனறிடுஞ்சிந்தை

புண்டரீகமுனிவன்முன்போயினார், பண்டவாதவிசைபலபாடினா
ரெண்டவாதநடமுமியற்றினா,தண்டமீதுவிழுந்தெழுந்தெழுவினார். (௪௬)

நம்மையேயுளங்கொண்டுநயந்திடுஞ்,செம்மையாளனிச்செய்கையுணர்ந்தி
லான்,கொமமைமெவமமுலைக்கோடுறத்தாக்கவுர, நம்மையாட்டுஞ்சியுமோ
[நதானரோ. (௪௭)

கண்டமங்கையர்நாணங்கதித்திடக்,கொண்டவார்கிளருமுனைகூறினார் [ர்,
விண்டவாயதத்தபபெருமேனமைடாலோலாடம ருமலுறையுருவியினுரு

இனியிபற்றுவதென்னையெனககவன,றனிபமோவியவாணைடனப்பாணெடு
ம், புனிதவானவரும்புடைசூழ்வர , பனிமலாந்த்லைய மைபரஞ்சார்ந்தன
தானவேந்தனவரவுநகதநெரிந, தானேவ ாவொடுமேவியே [ன்.
மீனவேலைவிழிதுயிலனைபைந்தமாயா, கானமாாபனைககண்டுளையாடினான்.

அன்னரோமமனையனம்பாலடைட, தனைருநதை ,தநாஙருமொருமுனி[ம்
முனனமேவிமுழுநதருள்செயயென, னனாயாமவரோடஙருநண்ணிறே

புண்டரீகனைபொருநதெலனெழுநதெநாரு, கணடரோ ரனையிற்பணிா தன
னணடருக்குமனுககரு பகாட்பியான, கணடெசநருள மெனறுகளிததனன.

உறுவசேனைமுறுனைநதபடிமபரோ, மறவிலகாட்சிபில்வாய்ப்பநின்னெ
னனமே, பெறுவையெனறுறபபேசப்பலொமொர, மறுவிலாதமாநாம
[மறநதாமனமறெ. (௫௩)

பொங்குகேளவிபபுகரினமுனியரன், றபநமோகைநவாதுாலைகொளத்
தெங்குவாாபொழில்சூழ்நதிருககாநதமேபருநதுவமாறறினான். (௫௪)

பறவுநீததபடிமையர்யாவரு, முறுமாாகதயுறுவநிறுவெறுக் [லுவாம்,
கறுமேவிரண்டாவதுகாட்சியைச, சொ ளாமினிக்காட்சியுஞ்செ ,

புண்டரீகமுனிவரிரண்டாங்காட்சியுரைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம்-௬-க்கு திருவிருத்தம்-௫௭௪.

புண்டரீகமுனிவர்மூன்றாங்காட்சியுரைத்தபடலம்.

மாதவச்சனற்குமாரனநிவானவனைடபோற்றி
மூதறிவுடையவுனையமுனிவற்குமூன்றாங்காட்சி
மேதகுபெருமானலகுகருணையுமவிளம்புகெனனச்
சீதளவதனங்காட்டிமகிழ்ச்சியிறசெப்புகின்றான. (௧)

சராசரமனைத்துமீன்றதாயினாங்கொடிவணங்கி
நிராமயபரமானநதிருமலபுண்டரீகன
பார்ஙிமூன்றாங்காட்சியாலிப்பினமுநதநதத
புராதனனறிதங்கூறெனறிராநதலும்புராணனகூறம. (௨)

ஒருவினம்பிரண்டாம்பாதமுளங்கொடுகருமமாற்றிப்
பொருவருநாலாம்பாதமெய்யொடும்புணர்தல்வேட்டான்
கருவடர்புண்டரீகன்கருதினீ கிறும்பூதின்னு
மருமலர்க்கிழவனுதியெவர்க்கும்வாய்த்திடுவதன்றே. (௩)

அம்மையென்றுலகமேத்து மருட்பசுக்கொம்பேமிக்க
செம்மைகொளபுண்டரீகனறிகழ்மனவாகருக்காய
மும்மையுமுலகமாயமுனறிறுமுய்த்தல்செய்யா
னம்மையேகுறித்துநிறபானிருவினைநலிவுநீாநதான். (௪)

பொறையுருவனமாநதகோதாய்பொறியைநதுமடக்கிநாளு
நிறைநவனுசெயதனைறிநிரம்புநங்குறியையபோற்றி
முறையுறச்சூழ்தலோடுமுழுதீாத்தமுமயாவோரு
மறைசெய்கேதநிாமுனுசூழ்வானருநதவமுருக்கொண்டன்னான். (௫)

திரைசெய்தீர்த்தங்களெல்லாஞ்சென்றுசென்றன்பினுடிக்
கரைசெயவெண்ணீறுபூசிககண்மணிமாலைபூணடு
புரைசெயாதெழுதஅமெண்ணிபபோககருங்கனிவுபொங்க
விரைசெயங்கதுபயினலலாயமேதகநமைப்பூசியபான். (௬)

அலங்குநங்கோயினமேவியலஙடன்மெழுகன்மற்று
மிலங்குபஃறீபமேறாலாதியவியறறுவாரை
விலங்குவெவ்வுரனைமொனறிவிரும்புமைஞ்சுத்தியாற்றித்
தலங்குநம்பூசைசெய்துதொழுதேதோதுநாளுசெய்வானை. (௭)

வளியிருவழியுஞ்சேறன்மாறறுபுநாப்பணூடி
யுளியெழவெழுப்பிநம்மையுணர்நதனாிருக்கின்றானை
விளிவின்முப்பொருளுமோர்நதுவெவ்வியபாசநீங்கிக்
களிகொளநம்மோடொன்றுதொனறிவாழ்கலப்பினானை. (௮)

கண்டிடுதொறுமார்வதாண்டனவாவுகாண்கமலப்போது
கொண்டிடுவிகசிதந்தன்றிருமுகத்தியல்பேதோன்ற
மண்டிடுமிடியனசெம்பொனவைப்பெதிர்கண்டாற்போன்று
விண்டிடுமுகமலாநதுவிளைநதெதுர்ந்தீஇயுவப்பான். (௯)

இன்னனமொழுகுநாதுயோனிறையவன்மூன்றுங்காட்சி
நன்னர்யாம்பெறுவதெநதஞானறெனவுளளத்துள்ளி
முன்னருஞ்சறுவதீர்த்தமுழுதுபுகனமேல்வாநது
பன்னருமாங்குமேவுநங்குறிபரவிப்போற்றி. (௧௦)

ஓங்குதென்கரைப்பாலெய்தியுயர்குணதிசையைநோக்கிப்
பாங்குசேர்சுகாசனத்துப்பண்புமேவுறவிருநது
வீங்குநான்முகன்மால்வேதவேதாநதமுணரொணுத
தேங்குபேரொளியாநம்மைச்சிந்தையிற்பதித்திருந்தான். (௧௧)

என்றுமோர்பொழுதேசற்றுண்டிரவுணாப்புண்டரீக
னன்றுதொட்டொருநாள்விட்டுமமைதரவிருநாள்விட்டு
மொன்றுறமுந்நாள்விட்டுமொருத்கொருபக்கம்விட்டு
நன்றொருமதியம்விட்டுநாடாதுசிறிதுண்பானால். (௧௨)

அயனமொவ்வொன்றுநீத்துமொவ்வொராண்டமையநீத்தும்
பயன்மிகவடையுமாண்டுபன்னிரண்டொருங்குநீத்தும்
வியனுறநூறுநீத்துஞ்சிறிதுணாவிழையுமன்றா
லியலுமெவ்வுணவுநீத்தானிருந்தனன்கற்றுணொத்தே. (௧௩)

இவ்வண்ணமிலக்கமேலோரிருபானாயிரமாண்டெல்லை
யவ்வண்ணமாயநம்மையகங்கொடுபுண்டரீகன்
மெய்வண்ணத்தவத்துமேவமேற்பொங்கியெழுந்தசம்மா
செவ்வண்ணத்தீயினோடுஞ்செறிபுகைப்படலமென்மேல். (௧௪)

தடநெடும்புகைமேற்பொங்கித்தானமுற்புவனமெல்லாம்
படருபுவெதுபபலோடும்பண்ணவர்நடுநடுங்கிக்
கடவுவெண்களிற்றான்பாதங்கலந்தனரிறைஞ்சிக்கூற
மடனின்மற்றவனோர்காலைமகதியாழ்முனிவன்வந்தான். (௧௫)

வந்தமாமுனியைத்தாழ்ந்துமணஞ்செய்கற்பகத்தார்வேந்த
னிந்தவான்றுமமேவறகேதுநீயுரைத்தியென்ன
நந்தநான்முகத்தான்வாழுநகரின்றும்வருதல்செய்வேன்
சந்தமார்புண்டரீகன்றனத்தலைத்தவஞ்செய்கின்றான். (௧௬)

அன்னவன்றவத்தாலாயதூமமென்றறைந்தாராங்கு
முன்னமேயுணர்ந்தேனென்றுமொழிந்தனனெழுந்துபோனான்
கொன்னவில்குலிசத்தோளான்குலவரம்பையலாக்கூவிப்
பன்னரும்புண்டரீகன்பயிறவஞ்சிதைப்பீரென்றான். (௧௭)

செழுமணிவயிரத்தூணைச்சிதலளாயரித்திட்டாலு
முழுமுதற்பரனையாலமுயன்றெழுந்தடாநிட்டாலும்
வழுவின்மற்றவனைக்காமன்மலர்க்கணைமயக்கினாலும்
பழுதிலம்முனிவனோன்புபாறுறாதெம்மாலெனறார். (௧௮)

இனியெவன்செய்துநாமென்றிலேகர்தங்கூட்டத்தோடும்
பனிமலர்க்கிழவன்பாங்கர்ப்படர்ந்தவன்பாதம்போற்றி
முனிவரன்றவத்தாலாயமுழுப்புகைமுருக்குந்தன்மை
நனியெடுத்துரைத்தான்வானநாட்டவன்கேட்டவேதன். (௧௯)

விளையவிந்திரனோடும்பால்வேலையினடுவட்பச்சை
வளையலகமலம்பூத்துமாநாகமிசைக்கிடந்தாற்
புளையாநம்மானைதாங்கிவிழிவளர்புயலைச்சார்ந்தா
ருளையநுமவுணக்கஞ்செய்தான்றுரைத்திடலுற்றான்மன்னோ. (௨௰)

திருமகண்மணாளகேண்மோதிரைக்கடல்வளாகத்துள்ளா
லொருமுனிதவஞ்செயகினாறுநுபுகைப்படலையாலே
கருகியவனைததுமோர்ந்துங்கண்டுயில்கின்றுயென்னைப்
பருவரலொழிமினென்றுபகர்ந்தனனெழுந்தானன்றே. (௨௧)

மாயவன்பிரமனுதிவானவரொடும்விரைந்து
தூயநந்திருமுன்வந்துதொழுதுவிண்ணப்பஞ்செய்ய
நேயமால்விடைமேற்கொண்டுவிரம்பியவவர்களோடும்
பாயப்பல்கணமுஞ்சூழமுனிவன்முனபடர்ந்தாமனறே. (௨௨)

காட்சிதந்தருணம்மைக்கண்டுவல்வினைதெழுந்து
பூட்சியோடடையுமுகதிபொருநதியதின்றெனறுன்னி
யாட்சிகொடவத்தான்பல்காலடிமிசைபபணிந்துசூழ்நது
மீட்சியிலெதிர்நினறேவாத்துதிபலவிளம்பலுற்றுன. (௨௩)

எவனருளவலியாறயர்தமெனைதநுமெவவுயிரகருமெய்து
மெவனருள்வலியாறபாசமெனைத்துமெவவுயிரகநமாயு
மெவனருள்வலிபாலோவாவினபமெவ்வுயிரகருமேவு
மவனொருநீயேயனறியாருளாரறவேறறணாுல். (௨௪)

எவனுடையாணையாலேமதிகதிரியங்காரிறகுங்
கவனவாநதிரைநீரவேலைகளைகடவாதுமேவும்
புவனங்களைநதநும்வைத்தநிலைமையிறபொருநதாநிற்கு
மவனொருநீயேயனறியாருளார்மிளிர்முககணணுய். (௨௫)

அதிசயம்பயக்குநாராயணவுபநிடதம்யாவை
மதியினிறநறித்தியாவர்வணஙகினுமவ்வணககந்
துதிகெழுநினவேயெனறுசொலுமுனைககுறித்துநாயேன்
விதியிறசெய்வணக்கம்வேறுமேவுமோவிமலவாழவே. (௨௬)

சாதலும்பிறப்புமிலலாய்தணத்தலுமபுணர்வுமறறாய்
காதலும்வெறுப்புநீரநதாய்நினைததலுமறப்புங்காணுய்
நோதலுங்களிப்புங்கூடாய்நுணமையாயதினாலத்தா
யாதன்முன்னெடுபினசாராயடியனிறபுகழாநினறேன். (௨௭)

விரிதருபடைப்புக்காப்புவினைத்திடுதேவர்நாளுந
திரிபில்சட்டுவமேபோனறுசெயற்படச்செயறபடுத்தி
யுரிமையிறகாலநோக்கியொழித்துமீட்டுறுத்தல்செய்தும்
புரிதருவிகாரஞ்சற்றும்புணராய்நிற்புணர்வானவேட்டேன். (௨௮)

அரிதனைத்தனையலாளையுனிவினைமுதலாச்செய்துந்
தெரியொர்பாற்படைத்திரண்டாம்வேற்றுமைப்பொருளாச்செய்து
மெரிகணைசெய்துமூன்றும்வேற்றுமைப்பொருளுமீயென்றும்
புரிபடையருளினான்காம்வேற்றுமைப்பொருள்புணர்த்தும். (௩௰)

செறியினைபபொழியவைநதாம்வேறறுமைப்பொருளுஞ்செய்து
நெறிகொளத்தழுவியாருமவேறறுமைப்பொருணிறைததுங்
குறிகொண்மாரயமர்நதேயேழாம்வேறறுமைபபொருளாகவொண்டு
மறிபெயாபபொருளோரினையடைதரமுயலாநினறேன். (௩௰)

மாயவனவந்துவேண்டமலாணைப்பொருட்டுமேய
தூயனைமகவாததநதுஞசுநதரமுகங்கணனகு
மேயவபபிரமனவேணடவிணடுளைமகவாததநதும
பாயகாரணமாய்நினறபரமநிறபழிசசாநினறேன. (௩௧)

திருமேனியோரொட்டுளளுஞசிலிமுகமொருமூனறுக
விருமேனியுருவையாகவியவைவயொனறுகமறறு
மொருமேனிபிரதமாகவொனறுதானவாகளசோரய
பொருமேனிலாஞசோமூனறுமபொடிததாயநிறபுணாநலவேட்டேன். ( )

சயநகனமறைநூரவைக்குநதானமுஞசடைமுறபூண
னயநதயல்கலநகமலவைகருமபேழையுங்குதாணமேலா
வயநருபொறகழலிறபூணடுமருவனுமபிலமாசசெயனு
சயபதுலவடிகேணினைசசாாதரமுயனறுநினறேன (௩௩)

படுசுவையுணவுநலருமட்டிலும்பகைபோயப்பாற
விடுகணையிடடுவைகருமாலமும்விருமபிளஞசே
யடுபசியபிணிதவிாகருமருமருநதனனசெபபுந
தொடுபயககடலாகக்கொணடதூயநிறசெழுமுதல்வேட்டேன. (௩௪)

நகுசடைமுடியாயபோறறிநஞசுணடுமுடியாயபோறறி
கருபநல்லுடையாயபோறறிகாணடிபறகுடையாயபோறறி
செருமழுயபடைடயாயபோறறிசிதைவளமபடையாயபோறறி
பிருதிறமெறறுயபோறறிவிரிாதநீரேறறுயபோறறி. (௩௫)

சூலவெமபடையாயபோறறிதொககதோலுடையாயபோற்றி
ஞாலமுணவிடையாயபோறறிநதிமதிசசடையாயபோறறி
யாலமுணடுடையாயபோறறியலருளததடையாய்போறறி
மாலமாபுடையாய்போறறிவானபுமுநடையாயபோறறி. (௩௬)

மறைமுதறகலையாய்போற்றிவணமதிககலையாயபோறறி
யிறைமையிறகலையாய்போறறியிரசிதககலையாய்போறறி
நிறைதிசைக்கலையாயபோறறிநிலவுகைககலையாயபோற்றி
யுறையொளிக்கலையாயபோறறியரவமேகலையாய்போறறி. (௩௭)

வரிசிலைமலையாய்போறறிவயங்குகமலையாய்போற்றி
யுரியவமலையாய்போற்றியொண்டாழைமலையாய்போற்றி
புரியகமலையாய்போற்றிபுயலெனுமலையாய்போறறி
வரியொமெலையாய்போற்றியலரமலையாய்போறறி. (௩௮)

திருநகராசாய்மன்னுஞ்சிவராசதானியென்று
மொருநகரரசேபோற்றியும்பர்நாயகனேபோற்றி
பெருமலைறயின்னுநதேருப்பேரருளாளபோற்றி
பொருவிடைப்பாகவாதிபுராணநாயகனேபோற்றி. (கக)

பொருவரும்வளஞ்சால்லாதிபுராணத்தினினிதமேவி
மருவுயிர்தழைப்பநல்கிவாழ்கருநதடங்கணம்மை
யொருபுறத்தமையக்கொண்டவுத்தமயோகிபோற்றி
பெருமையிற்பொலிகாயாரோகணப்பெருமானேபோற்றி. (௪0)

என்றுரைத்துருகிக்கண்ணீரிழிதரவெதிர்நின்றுளை
நன்றுளக்கருணைபொங்காயிருகரத்தால்வாங்கி
யொன்றுதலமையக்காயத்தொடுமாரோகணஞ்செய்தோமோர்
கன்றுதலினறியொன்றுய்க்கலந்தின்பந்துளைந்தானன்றே. (௪க)

இன்னதுகண்டவானோரிணர்மலர்மாரிபெய்தார்
பன்னகக்கிடக்கையாறும்பங்கயத்திருக்கையானுந்
தன்னிகர்புண்டரீகமுனிவரன்சார்நததெனணி
யன்னமென்னடையாயொல்லாவழுக்காறதுண்முழுகினுரால். (௪௨)

வெங்கதிரவனுஞ்சீதமதியெனமெய்குளிர்ந்தான்
மங்கலமலரளாவிமந்தமாருதமுலாவிற
றங்கணர்கருணையென்னுவிருநததென்றுடியாடித்
துங்கநன்முனிவரெலலாநதோய்நதனருவகைவாரி. (௪௩)

அறிவினிற்சிறந்தோர்பன்னுள்வருந்தியுமமையுமாறு
முறிவருமெமதுநாலாம்பாதமேமுயங்கிவாழ்வார்
செறிவலிச்சியம்யானைத்திறன்மருப்புறுவோன்றிப்
பிறிதுமொன்றவாவுங்கொல்லோபிறழ்கருநதடங்கணல்லாய். (௪௪)

பொருவரும்புண்டரீகன்புணரருமிளையமுத்தி
மருவியதிளையவாதிபுராணத்தின்வலியாலென்பார்
பெருகுமிச்சறுவதீர்த்தப்பிறங்குமாண்மியத்தாலென்பார்
வெருவருமினையமூர்த்திவிளங்கிடும்விசேடத்தென்பார். (௪௫)

இத்தரம்புகன்றுவானோரிலங்குமச்சறுவதீர்த்தத்
துத்தமமேவமுழ்கியொளிருகன்குறிபூசித்துத்
தத்தமதிருக்கைசேர்ந்தார்தவலருமுனிவர்பல்லோ
ரத்தலமகலாராகியருந்தவம்புரிந்துவாழ்ந்தார். (௪௬)

அன்றுதொட்டிளையதீர்த்தமரும்புண்டரீகதீர்த்த
மென்றுபேர்புனைந்ததன்னுமெய்ம்மையேயென்றுகூற
வொன்றுவெண்கமலம்பல்லவுருகெழுவலராகிற்கும்
கன்றுபல்லுயிருமின்பந்தலவரோக்கிபேணநல்லாய். (௪௭)

னுன்னியபுண்டரீகமுனிவரன்சரிதங்கேட்டு
மன்னியசருவதீர்த்தம்வாஞ்சையினாடியெங்கு
மன்னியமில்லாநம்மையன்புறப்பூசைசெய்வார்
பின்னியவடிக்கலப்பின்மேவுதலுண்மையாமால். (௪௮)

புண்ணியம்பாவமில்லையெனப்புகல்பொல்லாமூர்க்கர்
மண்ணியமணியேபோலுமாதவப்புண்டரீகன
கண்ணியசரிதங்கேளாகேட்பினுங்களையார்மேலோ
ரண்ணியதிக்கேசார்வரவரொடுமறைந்துளோரும். (௪௯)

விரும்புறமுன்னமாதிபுராணமென்பெயர்மேவிற்று
விருஞ்சிவராசதானியெனும்பெயர்பின்னராய
தரும்புகழுமைகாயாரோகணப்பெயரமைந்ததன்று
கருங்கணாய்மரீஇயிற்றற்பின்காரோணமெனவொன்றுன். (௫௦)

என்றதுமுமைமகிழ்ந்தாள்காயாரோகணமெனும்பேர்
நன்றினிதழைதற்கேதுவுணரெனமுனிநந்திப்புகன்றே
ளொன்றியபுண்டரீகனுறதைபெடுத்துச்சொற்றும்
வென்றிசைதேவதீர்த்தமான்மியம்விளம்பலுற்றும். (௫௧)

புண்டரீகமுனிவர்முன்றுங்காட்சியுரைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் ௧௦-க்கு திருவிருத்தம் ௬௨௫.

தேவதீர்த்தப்படலம்.

தாவரும்புகழ்ச்சனற்குமாரன்றக்கவர்
நாவருநந்தியைநயந்துபோற்றுபு
தேவதீர்த்தத்துமான்மியமுஞ்செப்பென
வோவருமகிழ்ச்சியினுரைத்தனமேயினுன். (௧)

மலைமகளாதியவன்னைவாணதி
கலைமதியொடுபுனைகடவுட்டாழ்தெழா
வலைகடற்றுறைக்காரோணத்தற்புத
முலைவறக்கேட்டுமிக்குளமகிழ்ந்தனன். (௨)

மறிதிரைப்பெருங்கடல்வரைப்பிலயாருநன்
னெறிகடைப்பிடித்திலர்நியமநீத்தன
ரறிமறையவருநின்னடியிற்பத்திமை
செறிதரக்கொண்டிலாகலியினதீமையால். (௩)

குறையறமார்பகங்கொண்டநூலலான
மறைமுதலனவெல்லாமதித்துக்கொண்டிலர்
நிறைபுகழ்நெறிநீத்துவேறுவே
றுறைதரவிலாஞ்சனைநுதலுறத்துவார். (௪)

நீறுமெய்ப்பூசுமந்தணருநேரதன்
மாறுவாயாற்பிறபெயர்வழுத்துவார்
வேறுரைசெய்தலுமெய்ம்மையோவதற
கூறுறவுள்ளத்திலுன்னல்கோடியே. (௫)

அந்தணரென்பதற்கமைந்தகாரணஞ்
சிந்தையிற்கொளாரிடுகுறிசெய்தாரினு
நந்தியதீத்தொழினயந்துளாரெனல்
வெந்தொழின்மேற்றெனவிருப்பிற்கொண்டுளோர். (௬)

இழிதொழிலியற்றியும்யாவர்மாட்டும்வெம்
பழிபடுபட்டிமையாதிபண்ணியு
மொழிவறவுணுமுதல்விற்றுமோகையிற
கழிபொருளீட்டலேகருத்தமைத்தனர். (௭)

பொருண்மறையவர்களிப்புன்மைமேவலால்
வருணமாச்சிரமமும்வழீஇமற்றியாவரு
மிருண்மிடற்றன்னடியெண்ணலோவினார்
மருண்மனத்துநரமோம்புதலின்மன்னினார். (௮)

மன்னவர்நெறிமுறைமாறுநூலுணர்
முன்னவருளுமுழுதொழின்முயற்சிசெய்
பின்னவருளுஞ்சிலரன்றிபபேணுறீஇ
யென்னருநெறிமுறையிகந்துமேவுவார். (௯)

மற்றிவராயுளுஞ்சிறியவல்வினை
யொற்றியநோய்களோபெரியவொன்றுபு
முற்றியவறுமையான்மூடப்பட்டுளார
பற்றியஞானமுமனுவின்பாலதால். (௧௦)

ஆதலிற்பிறப்பிவரகன்றுமுத்தியிற்
காதலிற்புகுவதெக்காலமன்றியுஞ்
சாதலிற்பெருந்துயர்தருபல்கும்பியும்
போதலிற்றளருமேபுடைவறத்தலால். (௧௧

ஆணத்திற்பெருந்துயரனைத்துந்தீரக்கா
ரோணத்தின்வசிந்துனைப்போற்றலொன்றுகொன்
மாணத்தினகப்படுமற்றுமுண்டுகொ
லேணத்தின்கரத்திறையியம்புகென்றனள். (௧௨)

என்றலுந்திருவுளமிரங்கியெம்பிரா
னன்றலினமதுகாரோணத்தல்குபு
பொன்றலிலாநமைப்போற்றலன்றியு
மொன்றலினென்றுளதுரைப்பக்கேட்டியால். (௧௩)

வினைதபுநமதுகாரோணமெய்ப்பெயர்
புனைகுறிக்கழற்றிசைப்பொருந்துநீரது
தனையருந்தவத்தரோசாரத்தக்கது
வனையினம்போலுயர்மாட்சிமேயது. (கச)

ஆதிநாளுமினிதமைக்கப்பட்டது
நீதியாடினர்க்கெலாநிரப்புநீரது
காதிமாபாதகங்காற்றவல்லதா
லோதிமாமுகிலனையுளதோர்தீர்த்தமே. (கரு)

அறுபதின்றலையிடுமாறுகோடியென்
றுறுபெருந்தீர்த்தங்களொருங்குதொக்கது
மறுவறநினைப்பினும்வழுத்தக்கேட்பினுங்
கறுவறக்காணினுங்கதிகொடுப்பது. (கசு)

அதுநிகர்தீர்த்தமற்றகிலத்தில்லையான்
மதுமலர்க்குழலினையமற்றதன்சிறப்
பிதுவெனவுரைக்குநரோவர்யாமலாற்
புதுமையதுறச்சிலபுகலுவாமரோ. (கஎ)

கூறுமுப்பத்துமுக்கோடித்தேவரு
நாறுகற்பகத்தொடைநயந்தவேந்தனு
மூறுதேமலர்த்தவிசுளானுந்தார்க்கிய
னேறுமாயனுமற்றையாருமுன்னைநாள். (கஅ)

இரணவேலவுணரோடேற்றுவென்றிட
மரணநீத்தமர்பெருவன்மையெய்துவா
னரணமாமருந்துபெற்றருந்தலெண்ணினார்
சரணமேவினருளர்ந்தவாதகாட்சியாய். (ககூ)

புரைதபுமந்தரப்பொருப்புநாட்டினார்
விரைதரவரவநாண்விழைந்துபூட்டினார்
தரைபுகழ்பெருமதித்தம்பங்கூட்டினார்
கரைபொருதிரங்குபாற்கடலைவாட்டினார். (உ௦)

ஓடதிகொடுத்தனருறக்கடைந்திட
நாடருஞ்சுவைக்குடநன்கெழுந்ததா
லாடல்சாலமரர்களதுகைப்பற்றினார்
வீடருமவுணரைவெரீஇயினாரரோ. (உக)

கலிமிகுமாற்றலர்காணவும்பமேல்
வலிமிகுபுயத்தவர்வெளவினென்செய்வா
மொலிகடல்வரைப்பகத்தாறுறுதலைப்
பொலியிடமெதுவெனப்புநதியாய்ந்தனர். (உஉ)

கடையெழுவெள்ளமுங்கலங்கக்கண்டிவர்
தடையவர்தமைப்புரந்தழிவிலாதமர்
மிடைவளத்திருநகர்வேறுகண்டிலே
முடையவர்செறிந்தகாரோணமொன்றலால். (௨௩)

என்றுதம்முளங்குறிந்நெய்திறைவண்
வென்றுயர்தீர்த்தத்தின்விழைபுந்தென்கரை
நன்றுயர்சுதைக்கடநயந்துவைத்தனர்
துன்றுவண்புனல்படிந்துணறுணிந்தனர். (௨௪)

எண்ணியபடியிருந்தடத்திறங்கிறு
ரண்ணியசங்கற்பமறைநதழும்கினூர்
தண்ணியவெண்பொடிதயநகப்பூசினூர்
புண்ணியமலிதாமகரையிற்போதமுன். (௨௫)

இருஞ்சுதைக்கும்பமோரிலிங்கமாகநா
மொருங்குளந்தெண்ணிமேருமொவியிலிங்கமாய்
மருங்கிருளறுந்தநவயங்கக்கண்டிளா
லருங்குறைத்தெனப்புகுந்தமர்நதுளேமரோ. (௨௬)

உலவில்கன்றுப்புதட்டிழுக்கையோர்மகண்
முலையளந்திடுமொருகருவிமொக்கணி
யலைவறவிவையெலாமமருநாஞ்சுதை
நிலையரும்பத்திடைநீங்குயெங்கோலோ. (௨௭)

வானவர்சுதைக்குடமருங்குவநதனர்
தானருமிலிங்கமாய்ந்நயங்கக்கண்டன
ரானதொன்றிஃதெனவறியகிற்றில
ரீனமிலுளத்திகைப்பெய்திறூரரோ. (௨௮)

செறிதருவானவர்திகைப்புமாற்றிட.
வறிதருமவ்விலிங்கத்துநின்றியாங்
குறிதருமான்மழுக்கொண்டகையொடும்
வெறிதருகூர்தலாய்வெளிவந்தாமரோ. (௨௯)

வெளிவருநம்மடிவீழ்ந்துபண்ணவ
ரொளிவருசோதியேயெங்கடெய்வமே
யளிவருகருணையேயமலமேயெனத்
துளிவருங்கண்ணொடுதுதிசெய்தாரரோ. (௩௰)

துதிபுரிபவர்முகநோக்கித்தூயவித்
திதிபெறுதலத்திடைச்செறிந்தவாலுகப்
பொதியெலாமிலிங்கமாய்ப்பொலியுமென்றிடி
லதிசுவைச்சுதைக்கடமயலொன்றுகுமோ.

ஏற்றஞ்சாலமுதகடேசமென்றொரு
தோற்றஞ்சால்பெயர்பெறீஇத்தலங்குமித்தல
மாற்றஞ்சாறுதியொடுவணங்குவார்க்கரு
ளூற்றஞ்சால்வினையொழித்துதவுநாளுமே. (௩௨)

வண்பதுமாசனனாதிவானுளீ
ருண்பதுபோயதென்றுளம்புழுங்கலீர்
பண்பதுபாரயவித்தடத்துநின்றமோர்
நண்பதுசால்சுத்தக்குடநன்றீகுவாம். (௩௩)

என்றொருசுதைக்குடமெழுநினைநதன
மன்றொருகடலெழுமமுதவிந்துவி
னன்றொருங்கெழுந்ததுநயநதுகண்டனர்
பொன்றொருதினமுமின்றென்றுபுங்கவர். (௩௪)

வெருவமுதெதிர்ப்படூஉவெறுத்தல்சாலமு
தருவருளாற்றரலமைநததன்றெனா
மருதுநிற்பார்கிளைவாங்கியுண்டுமெய்
யிருவலிபெறுமினென்றியம்பினமரோ. (௩௫)

அருண்மறுத்திடுவதற்கஞ்சிவானவர்
தெருள்சுதைக்குடத்தினைச்சென்றுபற்றினர்
வெருளறயாவரும்விரும்பியுண்டனர்
மருளில்யாமாவயின்மறைந்துளேமரோ. (௩௬)

மறைமுடிவயங்குநாமறைக்காண்டலு
நிறைவெருக்கொண்டதுநீங்கிப்பின்னரு
முறையினத்தடம்படீஇமுன்னினோர்க்கெலாங்
கறைதபுகருணைக்காரோணம்புக்கனர். (௩௭)

ஆண்டுநம்மையுமருளமைந்தனினையும்
பூண்டுபேரன்புளம்போதறியாங்கொரீஇ
மீண்டுவந்தமுதகடேசமேவினார்
தாண்டுகாதலினமிகத்துதித்துப்பூசித்தார். (௩௮)

விடைகொடுத்தமதிருக்கைமேவினார்
குடையவர்பாதகங்குமைக்குமப்புனல
கடையுறுத்தேவபுட்கரணியாயது
நடைகொளிவ்வேதுவாலுணர்திநங்கைநீ. (௩௯)

தேவதீர்த்தப்பெயர்செறிந்தவாவியுள்
யாவர்போய்க்குடையினுமியைந்தவெவ்வி
பாவநூறுயிரகோடிபாறிடு
மேவமால்வரைவருவிமலையின்னுங்கேள் (௪0)

வேறு.

ஆயவெங்கதிரோனவொருபொழுதுசெய்யரசும்
பாயதாரகைக்கணநடுபொலிதருபண்புந
தூயவானவர்தம்பசியவித்திடுதுணிவு
மேயசீதளகலைமதியென்பவன்மேனாள். (௬௧)

பரமடந்தையர்ப்புணர்தலிற்படுபழிபாவந்
திரமடைந்திடுமெனபதுதனறுளந்தெரிந்துஞ்
சிரநெடுந்துயர்விளைத்திடுகருமலச்செருககால
வரமிகுங்குருமனைநலம்புணர்வதுமதித்தான. (௬௨)

ஆன்றசாலிமுற்பற்பலருயர்புற்றதறிந்துஞ்
சான்றபேரொழிற்றாரையுஞ்சந்திரனழகே
மான்றவுள்ளத்துமதித்தனள்வருபழிமதியா
டோன்றவாண்டளபபாறபிழைநதிடுவதேதுணிந்தாள். (௬௩)

இருதிறத்தருமின்னராயொழுகுழியொருநா
ளொருகழைச்சிலைகோட்டியொண்சுரும்புநாண்பூட்டிக
குருமலர்க்கணையெடுதெதெடுத்தளப்பிலகூட்டித்
தெருமரச்சமர்செய்தனன்மாரவேள்சினந்து. (௬௪)

வருமலர்க்கணைபாய்தலுநெஞ்சமாழாந்து
கருகிருட்கதிரரசனிலலமையத்திற்கசிந்து
வெருவரச்சென்றுதாரைமென்மலர்க்கரம்பிடித்தா
னருவருப்புறுதவனாமறறவனுடனணைந்தாள. (௬௫)

கொண்டுபோயொருதன்மனைக்குறுகிமெல்லமளி
மண்டுவான்பரியங்கத்தினிருத்துபுவரமபு
விண்டுமேல்விழாமெய்யுறததழுவிவாயூற
லுண்டுதேக்கியொண்முகத்தொடுமுகமியைத்துவந்தான் (௬௬)

முத்தமுண்டனனிளமுலைவருடினனமுழுதுஞ்
சித்தமின்புறவரைக்கலைநெகிழ்த்தனன்செழும்போ
தொத்தவொண்கடிதடத்தளைவிடுத்தனனுவபபுற்
றத்தகைப்படுங்கடலகத்தழுந்தினனாலோன். (௬௭)

மதியழிந்தொருமதிகுருமனையொடிவ்வண்ணங்
கதியமைந்தவாபோன்றுபன்னாளுங்களிக்க
விதிகொளந்தணன்மனைவியைககாணலன்வெருவித்
திதியமைந்தவைப்பெங்கணுந்தேடினனறெரிந்தான. (௬௮)

பாவகாரியீதாற்றியதென்னெனப்பதறித்
தேவர்வேந்தனோடொருழியடைதரத்திரட்டி
மேவவெவ்வியமதிபுரிசெயலெலாம்விளம்பி
யாவராந்துறவடைகுதுமினியெனவறைந்தான். (௬௯)

குரவன்வாய்மொழிசெவித்துளைகுறுகலுங்கொதித்துப்
பரவுவானவர்யாவருமிகமனம்பதறிக்
கரவலாகியமதியினைப்புடைத்திவட்கழித்து
விரவுதுன்பமுங்கழிக்குதுமெனவெகுண்டெழுந்தார். (௫௰)

அதுதெரிந்துமிக்கஞ்சுபுவிதிர்விதிர்ப்படைந்து
விதுபளிங்கமரிடம்புகூஉவவனடிவீழ்ந்து
கதுமெனச்சுரர்வளைந்துபோர்குறித்ததுகளாய
விதுவெனுவதென்றவனுமற்றவுணருக்கிசைத்தான். (௫௧)

தீயதானவர்வட்டுடையிறுக்கினர்சினத்திற்
பாயமாமுகரோமமுமுறுக்கினர்பலகை
யாயவாள்சராசனமுதல்யாவுங்கையமைந்தார்
மாயவான்சமர்குறித்துவாளுடைவளைத்தார். (௫௨)

திதியளித்தவர்வளைந்தமைதெரிந்துகண்சிவந்து
பொதிகுடச்சுதையெடுத்தயின்றமரராய்ப்பொலிவார்
கொதிசமர்த்திறற்கோலத்திற்குறைவறக்கொண்டு
மதிபிழைப்பதின்றெங்கெனவாளமரேற்றார். (௫௩)

சிலைவளைத்தனர்செறியாணேற்றினர்திக்கின்
மலைபிளப்புறமாமதயானையுமயங்கித்
தலைவிதிர்த்திடநாணொலியெழுப்பினர்சலதி
யலைமுழக்கமுமச்சுறத்தோள்புடைத்தார்பபார். (௫௪)

ஒன்றுபத்துநூறாயிரமெனக்கணையுகைப்பார்
சென்றுசென்றுவாள்வீசுபுசாரிகைதிரிவா
ரன்றுவாள்வெட்டுப்பலகையிற்றகைந்துசென்றடர்ப்பா
ரின்றுவென்றிமற்றெமதெனநெடுமொழியிசைப்பார். (௫௫)

பரியுகைப்பவர்பரியுகைப்பவரொடுங்கழைகொல
கரியுகைப்பவர்கரியுகைப்பவரொடுமுருளைக்
கிரியுகைப்பவர்கிரியுகைப்பவரொடுஞ்செங்க
ணரியுகைப்பவரரியுகைப்பவரொடுமமர்த்தார். (௫௬)

மண்ணிடைப்புகும்வாளராக்குலம்பலவயங்குங்
கண்ணிடைப்புகுமழைக்குலத்திடைப்புகுங்கார்கோ
ளெண்ணிடைப்புகுந்திசையெலாம்புகுமிருதிறத்தா
புண்ணிடைப்புகுந்துருவியபொருதிறற்பகழி. (௫௭)

முடியழுந்தியமணிபலதெறித்திடமுழுதங்
கடிமணிக்குழைசிதர்ந்திடத்தோள்வளைகழல
வடிபிடித்தனர்மேலெடுத்தறைந்திடுமள்ளர்
தடியிடைக்கதிர்ச்சாலிகொன்மள்ளரும்போன்றார். (௫௮)

மொழிந்தமள்ளர்களறைதலுமுற்றியசெந்நெல்
கழிந்தவையினைமேலெடுத்தெறிதிறங்கடுப்ப
வழிந்தநெஞ்சிலாவொருவரையொருவர்தொட்டறைந்து
பிழிந்தவாற்றல்செய்தெடுத்தெடுத்தெறிவர்மேற்பிறங்க. (௫௯)

தோளிழந்தவரிழந்தனர்தும்பைமாலிகையுந்
தாளிழந்தவரிழந்தனர்தழங்கொலிக்கழலும்
வாளிழந்தவரிழந்தனர்பிடித்தவன்கையு
நாளிழந்தவரொருவிருதிறத்தருணலிந்து. (௬0)

ஆவமாகிமெய்சிவப்பவும்விழிச்சிவப்பழிபா
ரோவமேயெனநிற்பினுநிற்பரஃதொழிந்து
மேவமுன்வைத்தபாதம்பின்வைத்திடாவிறலார்
பாவமுந்தருமமுஞ்சமராடியபடியார். (௬௧)

ஒருவர்தண்டமற்றொருவர்கைத்தண்டத்தாலுடையு
மொருவர்தோமரமொருவர்தோமரத்திறுவொழியு
மொருவர்வெஞ்சரமொருவர்வெஞ்சரத்துடைந்தோடு
மொருவராற்றன்மற்றொருவராற்றலிற்றறையுதிரும். (௬௨)

படையிழந்தவரொண்ணிமெய்ப்புரைபடைபறித்துத்
தடையிலாதெதிர்சமர்செயவம்மினெனறழைப்பார்
படைபறித்தவருளுஞ்சிலர்கோறுதல்பாதகமுந்
தடையிலாதுடற்புண்ணிட்டுமிமித்தனாசார்வார். (௬௩)

மேயவாகவப்பூமியின்மறிதரவீழ்ந்த
பாயகேடகம்பரிகலமபாந்துவீழ்முனை
யாயசொன்றிமற்றதனமிசையீருளம்பருப்பு
நேயமென்றசைநிணமெலாநிரப்பியசுதிகள். (௬௪)

என்புவற்றல்வீழரக்குநீரினிதுபெய்கிருது
வன்புமேயதோன்றூடியபரிவட்டமாக
வன்புமேவியசயமகணிவேதனமமையும
புன்புலாலுடல்சாய்ந்தவர்பணிபவர்போன்றார். (௬௫)

இந்தவாறமர்நிகழ்வுழியுலகெலாமேங்கச்
சந்தநான்முகனறிந்தவணடைந்தமர்தணித்துப்
பந்தமேவியமதியினைக்கூயவற்பார்த்து
நந்தநீயெவன்செய்தனையென்றிதுநவில்வான். (௬௬)

கற்றகல்வியும்பரிதியோடெண்ணிடுகணிப்புஞ்
சொற்றகோள்களுளொன்றெனத்துலங்கிடுமாண்பு
மற்றமோவவெவ்வுணவுநன்றுக்கிடுமமைவும்

ஈரநெஞ்சிலாமுருடருமிதுசெயத்துணியார்
வீரமொன்றிலாவலியுருமேல்விளைந்திடுமே
பாரமோவுருப்பாதகந்தடிக்குமேயயலார்
தாரம்வெளவினார்நரகன்றிச்சார்வதுமுண்டோ. (சுஅ)

தீயசெய்தனைதாரையைவிடுமதிசெத்தோ
ரூபசெய்கையையுயிருடனிருந்துமென்றறைந்தான்
தூயதேவர்கள்குரவனைப்பிழைத்தவித்துட்டன்
மேயவேள்வியிற்பாகமெய்தானெனவிதித்தார். (சுகூ)

நிலைகலங்கியவிமகரனெடிதுயிர்ப்பெறிந்து
தலைவனைந்தொருதாரையைவிடுத்தனன்வியாழங்
கலைசொலுங்கழுவாய்செய்துகைக்கொடுபோனு
னலைவில்வானவர்யாருந்தம்மிருக்கைசென்றடைந்தார். (எ0)

முத்தவாணகைத்தாரைசின்னாளிற்குன்முதிர்ந்து
வித்தகனோருமைந்தனையீன்றனள்வெய்யோ
னொத்ததானவனென்மகனெனவழக்குரைத்தான்
சுத்தவாரியன்றன்மகனேயெனச்சொற்றுன. (எக)

இருவருங்கலாய்த்தின்னணமாறுமேல்வவு
மருமலர்த்தவிசோன்முனம்போலவேவந்து
குருமலர்க்குழற்றாரையைநோவரக்கூவிக்
கருவில்யாவராலமைந்ததிக்கான்முனையெனறான். (எஉ)

என்றகாலையிலறிந்திலாய்போலவிங்கெனவே
யொன்றநீவினாவியதெவன்மதியெனவுரைத்தா
ளன்றவன்மதியாலெனல்குறிபபினாலறிந்தான
வென்றதானவன்பாலுறமகவினைவிடுத்தான. (எங)

அன்னமூர்பவன்றனமர்வளநகரடைந்தான்
பின்னமேவுருத்தீவினைபெருகலான்மதியோன்
முன்னமேவியதேசுமுற்றொழிதரமுன்னி
யென்னகாரியஞ்செய்தனமென்றிழித்திருந்தான். (எச)

மதலையாம்புதனைத்தழீஇமகிழ்தலினிந்த
விதலைதீர்திறமின்றெனமெலிந்துளதெண்ணி
முதலைசூழ்புவித்தீர்த்தங்களினிடைச்சென்றமூழ்கி
னதலைவார்துயர்தீர்க்குமென்றவணிவந்தடைந்தான். (எரு)

ஆயகங்கைமுற்றீர்த்தங்களனைத்திலுந்தோய்ந்தான்
[illegible]யமேவொளிமுன்னையிற்பொலிதரக்காணன்
மேயபாதகம்வீந்திலதின்னுமென்செய்வா
மாயமோவிஃதென்றழுதிரங்கினன்மதியோன். (எசு

அந்தவேலையின்மகதியாழ்முனிவரனடுத்தான
மூந்தமேவியயாவையுமறிதரமொழிந்து
சந்தமேவவனடிமிசையழுந்துதாழ்ந்தெழுந்து
நந்தவோதுவதுண்டெனவனை பவனவில்வான். (எஎ)

குணகடறகணாநாகைககாரோணசநகைத்துறுகி
யணவுதேவதீாதததுநீமூழ்ழ வையாகிற
புணரும்பாதகமெவ்வளவிருபபிழமபோச
முணருமாறுநீமுனையிறபொலிவையெனறுரைததான். (எஅ)

சொறறவாசகஙகேட்ட முனிவரயிறறுனைநதே
யறறமேதுமிறுகைககாரோணமவநதனடைநதா
னுற்றவானவாபலாருமீதிரநடைவதுமுணாநது
வெறறதேவபுட்கரணியாரெனவிருமினனே. (எகூ)

ஈதுதானெனவிகழநதினருமையைமிகவெகடநதச
சாதுவானவரவரொடுமுநசடமபடிாதான
காதுதீவினைவேரொடு கருவியுடனே
யோதுமுனையிலுருபவபாவிநதெழுநதனறுவநதான. (அ0)

வெய்யபாதகமுழுகுமுனவிடுபடபாக்கி
யையமுன்னையிற்பொலிவுநனகருளியதெனனில
வையமெங்கணுாடிநுமிதுபொரூஉம்வாவி
செய்யவாயிறுயுணடுகொலசெயபுவதினியென். (அக)

அரவினுல்விடுபட்டவனெந்தலநகாலோன்
புரவினுலுபாநடதிருககோயிலுட்புநநதே
யிரவினுறபுரிநணடதசெமமினை படி பிறைஞ்சி
யுரவினுறபொலிசினையுமவழூததினுனமையே. (அஉ)

திருந்துநகுறிபபதிட்டைபுரிநறசசெயது
பொருந்துபூசனையொருமதிசெய்தனனபோறறத்
திருந்துபல்வரகசளுநதநதுகேவரோடனாவி
யருநதுவேளவியிறபாகமுமபெறுமபடியளிததோம். (அங)

விளாசெயாம்பல்கண்முகமலர்நதிடவெழும்வீபத
துளாசெயமுனையிநசிறபபடைாதுவப்புறபபணிநது
புளாசெய்நாமருளவிடையொடுந்தனபதமபுகுநது
களாசெய்தன்செயல்புரிநதுவாழ்நதிருநதனனகளித்தே. (அச)

மன்னுதேவதீர்த்தப்பெருமானமியம்பகரி
னன்னுதாலனவிட்டெவர்நவின்றிடவல்லார்
பனனுதேனினுமமுதினுநனிசுவைபடுமா
மின்னுமொனறெடுததியம்புதுமினிதுகேட்டிடுதி. (அரு)

வேறு.

மின்னுநாணுமருங்குல்விமலைகேள், பன்னுமண்ணுலகெல்லாம்பரிப்பவன்
பொன்னுநேரில்குணத்தனபுருரவா, வென்னுநாமத்தரசனிருந்தனன். ()

மதிக்குலஞ்செய்தவத்துறவந்தவன, விதிக்கொடுந்திக்குமேவும்புகழினுன்
றுதிக்கிரங்குநாதரொடொழுவாழ்க்கையா, னுதிக்குமன்பினுயிரினிதோம்
[வான். (அஎ)

அறியுமேன்மையமைச்சாபுரோகிதர், செறியுந்தானைத்தலைவர்சிறந்துற
நெறியுமாலெனநேர்ந்துசூழ்விதரோ, மெறியுஞ்செங்கோலினிதுசெலுத்
[துநாள். (அஅ)

மீனவார்கடல்சூழ்புவிவேந்தகே, ளானகேட்டவினையதுசாம்பகலாற்
றுனவாரணமாதிநமைநதொழுது, வீனமாயுமெனவுரிமைஞ்சிச்சிலர். ()

கேட்டவேந்தன்மனமகிழ்ந்திடி, ட்டவாம்பயிராதியொழிகரும்
வாட்டமலலனமனுயிர்கருண்டெடு, வேட்டமாடும்விருப்பினெழுந்
[தனன். (கூ0)

அரையிற்காதுரிபாடையடுத்தினன, விரைபங்கச்சடைவாளொடும்விக்கி
னன், கரையுமெய்யிறகவசமபுனைந்தனர், புரையிலாத்தலைச்சாத்தும்பொ
[ருந்தினுன். (கூக)

முதுபெரும்பகையாளர்முடித்தலைக், கதுமெனக்குரம்பைநதுயிர்காற்றிடு
வதுகடுப்பின்மறலுமகொடியகாற, றதிறம்புமடற்பரிமேயறினுன். (கூஉ)

கூற்றம்பல்லுருக்கொண்டன்னகொள்கையர், சீற்றமினமியுந்திமெழுநோ
ரோற்றமிக்கவிருந்திறல்வீரர்க, ளூற்றமிக்கவுவகையினமுசந்தினுா. [க்குவா

காயுஞ்சீற்றமும்போதநினைகருக்குநோர், வாயுமுன்னாலவென்றருந்தோகையு
மேயுஞாளிக்குலம்பலவீண்டின, தோயுமவாவலைபாளருஞ்சூனனினார். ()

மிடலொடுஞ்சலில்வெம்பகையோருயி, ரடலசெயும்படையாள்கைப்புரு
வா, விடலிலார்தொடர்வீரரொனபபடுய, கடலொடுமபெருங்காட்டிட்புகு
[தனன். (கூரு)

ஒடியெறிந்தனர்வாருமொழுககினூர், கடியவாரவலைசூழவுங்கட்டினூர்[ஞர்
அடியெறிந்துதுவன்றியவேடர்கள், வெடிகொளும்பலவிலங்குமெழுப்பி

சிங்கம்யாளிசினக்கரிந்தரக்குமா, தங்கமெல்ஞதவாவலிச்சல்லியங் [ன
துங்கமான்கருங்கேழறபெருடக்கதுந, வெங்கண்மாக்களவெருவியெழுந்த

கூடிச்சென்றுசுரிகையிற்குத்துவார், நாடிபபாட்டுதலைகாநதகமீசுவார்
தேடித்தேடிச்சிலைக்கணைதூறுவார், வாடிச்சோரவிவ்வாறமராற்றினூர்.

வாலிழந்தனபல்லவலிகடைக், காலிழந்தனபல்லகலங்கிமெய்த்
தோலிழந்தனபல்லதுடிதுடிக், தோலிழந்தனபல்லவுடன்றரோ. (கூகூ)

துடித்திடுஞ்சிலதோகையெடுத்துமன், னடித்திடுஞ்சிலவாரயிலாதியைக்
கடித்திடுஞ்சிலகானகந்துளெழ, வெடித்திடுஞ்சிலமிக்கபன்மாக்களுள்.()

இன்னவாகவனத்துவிலங்கெழூஉப், பின்னமாகிப்பெயர்தருகாலையிற் [ன்.
சொன்னவார்கழற்றேன்றல்புருரவா, மன்னனேர்ந்துவடிக்கணைதூவினு

புலிமுகத்திற்புகுந்ததோர்நெடுங்கணை, வலியிறப்பினசென்றுவாலடித்தோன்
றுவ, மெலிவிலாவிவ்விலங்குக்கிரட்டைவா, னலியுமாறுற்றதென்னென
நாடவே. (௧0௨)

ஏற்றயானைமுகத்திலிருகணை, யேற்றவுள்ளானுழைந்தும்வெளியினுந
தோற்றநான்குமருப்புச்சுமந்ததெத், தோற்றமெனறுதுணிதரவாய்வரால்.

மடங்கலேயெனவலவினைந்தேகியோர், மடங்கனமார்புகிழித்ததொர்வன்
கணை, மடங்கல்கூடாவலிசாலொருநர, மடங்கல்கீண்டவலியபுண்மானவே

கணையொன்றய்பபக்கடுகிமதிக்கண்வாழ், [illegible]யணைந்திடமேற்செலுஞ்
சூழ்ச்சிபோ, லிணையுமவேகததெழுந்துமேபருவுவ, பிணையொடும்பயில்
[பெட்பிலகுரங்கமே. (௧0௩)

மோகவாண்முனிந்தாலுமுனிவுயீண், போகமேனமயிர்க்கேடகம் போர்த்
தென, வாகநீணமயிராருங்குடாவடி, வேகமாறும்விடுகணையொன்றனுல்.

கோடிழந்தனகுஞ்சரமார்பகசு, தோடிழந்தனவேங்கையுயிர்திறற்
பாடிழந்தனபஞ்சானனம்பெருங், காடிழந்தனமொய்த்தகவரியே. (௧0௭)

வாளியோயினும்வைகுதிவேலவிடு, மீளியோயினும்வெவ்வியகட்கமா
மாளியோயினுமாங்காயசுப்பறிம், ஞாளியோய்விலதாயினநாடினே. ()

ஞலடைந்தபிணைவைத்தொடூ..திலான், மாலடைந்தபறழும்வதைத்திலா
னுலடைந்தவுறுசினமாககலோ, வேலடைந்தவிருந்தெனறுநூறுவான, ()

மேயவித்திறம்வேட்டைவினைமுடித், தாயமன்னனடுபரிமேறகொளாப்
பாயவெம்பசிபறறிவருததலாற, ரேயமாநகர்றன்னமுடுககினன். (௧௧0)

பரிவிரைந்துபடருநடைவயோர், விரிகிளைத்தருநீழலோர்வேதியன்
சரிவருத்தநததணிப்பகிடநதனல, புரிநிறததிறபுரவிமிதித்ததே. (௧௧௧)

உளைவயப்பரியோரடி..வைத்தலும், வளைமருப்பெருமைப்பகரேர்பவன்
விளை..யப்புறமேவுநகாசெலவா, விளைதிறததினனீரடிவைத்தனன். (௧௧௨)

கண்டமன்னனகலங்கிநகலன்றனன், மண்டவந்தலன்பிரமக்கொலை
யெணடூவாவிதறகெனசெயலென்றுசோ, கொண்டமாதவர்கூட்டங்குறுகு
[வான். (௧௧௩)

அண்மைபோர்பொழிலாங்குவசித்திடும், வெண்மைநீசிசுவாமித்திரன்
முத, லொண்மையோர்திருவப்பணிந்தன, ணெண்மையோவடைந்ததி
[யமயினன். (௧௧௪)

கேட்டமாதவர்கேழ்கிளர்வேந்தநின், வாட்டமோவுமறையவனுக்கிடு
காட்டகத்துக்கடனுரியோர்க்கொடு, நாட்டமேவநடத்துதிநன்றரோ. ()

பின்னர்நீபரிமேதமகம்பிணை, யன்னர்மேவநடத்திடுவாயெனின்
மன்னரேறனையாய்வந்ததிங்கொடு, முன்னராறியதீங்குமுருங்குமால். ()

என்றுகூறவிறைஞ்சினனேகினன், பொன்றுவேதியனுக்குப்புரிகட
னன்றுசெய்நரைக்கொண்டினிதாற்றினு, ஞென்றுமாமகஞ்செய்வதற்கு
[ன்னினான். (ககஎ)

அளவிலாமறையந்தணரைத்தழீஇ, யளவிலாச்செம்பொன்வாரியளித்தன
னளவிலாவறமாக்கும்பரிமக, மளவிலாப்புகழானினிதாற்றினன். (ககஅ)

அதுபுரிந்துமகன்றிலதாய்ப்பழி, சதுவிழலிற்பற்றக்கலங்கியே [னன்.
யெதுசெய்துய்வலினியெனவேதங்கள், சதுவுமோர்ந்தவுமியற்சார்ந்த

முன்னடந்ததனைத்துமொழிதலு, மன்னமாதவனுள்ளத்தினாய்ந்தனன்
பின்னமின்றிப்பிறங்குபன்னூல்களுஞ், சொன்னதீர்த்தங்கள்யாவுந்துளை
[யென்றான். (கஉ0)

தூயகங்கைமுதற்பலதோயமு, மாயவன்பிணைநதணைந்தாடினான் [ன்.
பாயசெம்பொனமுற்றனமும்பண்ணினான், றீயதாயதுதீர்தரக்கண்டிலா

விட்டும்வாசமராற்றற்கெனக்கெழீஇ, யொட்டார்கோபித்துடன்றெழுமார்
பகர், தட்டும்போக்குர்தடுக்குநதடம்புயங், கொட்டுமோர்க்குங்குதிக்கும
[திர்க்குமே. (கஉஉ)

பெயர்விலாதபிரமகத்திக்கெவன், செயலெனுவுளநதேம்பிக்கவுதமி
புயர்நதிக்கரையுற்றகவுதம, னயர்வில்பாதமடைந்தனனன்னவே (கஉங

அன்னமாதவற்கோதியமுதன, னென்னபாதகமேறமுன்னெண்ணிலை
யின்னதீருங்கழூவாயியம்புது, மன்னவென்றுவகுத்துரையாடுவான். ()

செறிவளங்கொடென்றேசத்துள்யாவரு, மறிபுலிக்கொடியான்றிருநாட்
டிடைக், குறிகொள்கீழ்கடல்வேலையிறகோலமார், நெறியினின்றுநிலவுங்
[காரோணமே. (கஉரு)

கேடுபோக்கிடுங்க்ஷேத்திரராசமென், றுடுகாமர்தொடுமத்தலமுறும்
பாடுசாலநினுள்ளதபாவெலா, நாடிவானவதீர்த்தநராடிட. (கஉசு)

அந்தத்தீர்த்தத்தடைந்துமுழுகுறி, னெந்தப்பாதகமுங்கழிந்தேகிடு
மந்தத்தானத்தமரிலிங்கநதொழி, னெந்தப்பேறுமெளிதிற்கைகூடுமே, ()

அடையின்னேயென்றாசனையேகினன், மிடையுமோகைதரும்பிடவேந்
தனுங், கடையுறுத்திருக்காரோணத்தெய்தியின், றடையுந்தெய்வப்புனல்
[துடைநதானரோ. (கஉஅ)

குடைந்தபோதேகொடும்பழிமாய்ந்தது, மிடைந்ததேசின்விளங்கியெழு
ந்தன, னடைந்தவோகையனுயநம்மெதிரடைந, துடைந்தநெஞ்சினுருகித
